# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (15-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:224


# குடாநாட்டில் நடைபெறும் போரை நிறுத்தக் கோரி கொழும்பில் மறியல் போர்

## வேட்பாளர் தலைமையில் நடந்தது

கொழும்பு,செப்ரெம்பர்15

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெறும் போரை நிறுத்தக் கோரி, நேற்றுக் கொழும்பில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.**

**ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பட்டியலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் (தனித்துவ) வேட்பாளர் க.தேவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பல அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்குகொண்டனர்.**

பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்தின் முன்னால் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மறியல் போராட்டம் ஆரம்பமானது.

ஐக்கிய சோஷலிஸக் கட்சி, தொழிலாளர் பாதை, சோஷலிஸ சமத்துவக் கட்சி, தமிழ்க் கல்விமான்கள், மூத்தோர் பேரவை, அரங்க செயற்பாட்டுக் குழு, சலன சித்திரம், ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த மறியல் போராட்டத்தில் பங்கு கொண்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனியில் உண்ணாவிரதம் தொடர்கிறது

பொன்,செப்.15

ஜேர்மனியில் இருந்து தம்மை இலங்கைக்கு நாடுகடத்துவதை ஆட்சேபித்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள 4 ஈழத்தமிழர்களும் இன்று 12ஆவது நாளாக தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்துகின்றனர்.

இதேவேளை - இவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஜேர்மன் மாநில அரசு பரிசீலனைக்கு எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் முதலாவது கோரிக்கையான நிரந்தர வதிவிட அனுமதி பற்றிய கோரிக்கையை பக்கின்றெட் நிர்வாக நீதிமன்றம் நேற்று பரிசீல

(14ஆம் பக்கம் பார்க்க)

## சபையில் 'ஸ்ரிக்கர்'

கொழும்பு,செப்.15

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்துக்காக நாடாளுமன்றம் நேற்றுக் கூட்டப்பட்டசமயம் வாக்காளர் அட்டையில் ஒட்டுவதற்காக அச்சிடப்பட்டுள்ள 'ஸ்ரிக்கர்' ஒன்றை மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவிமௌலானா சபையில் சமர்ப்பித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் இந்த 'ஸ்ரிக்கர்' பிரச்சினையே முக்கிய இடம்பிடித்திருந்தது.

இந்த 'ஸ்ரிக்கர்' எவ்வாறு கிடைத்தது என்று ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி அத்துகொறள அலவிமௌலானாவிடம் கேட்ட சமயம், ஓட்டோ சாரதி ஒருவரிடம் இருந்து தனக்கு அது கிடைத்தது என்று அவர் பதில் அளித்தார்.

போலி வாக்கு அளிக்கப்படுவதைத் தடுப்பதற்காக வாக்காளர் அட்டையில் 'ஸ்ரிக்கர்' ஒட்டுவதற்காக தேர்தல் ஆணையாளர் அவற்றை அச்சிட ஏற்பாடு செய்ததும் -

அந்த விடயம் வெளியேவரவே பெரும் பிரச்சினையாக அது உருவாகியுள்ளதும் - குறிப்பிடத்தக்கது. (இ-3-8)

## தேர்தல் மோசடியைத் தடுக்க ஒரு லட்சம் மக்கள் படை!

### தாய்நாட்டைக் காக்கும் இயக்கம் திரட்டும்

கொழும்பு,செப்.15

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெறக்கூடிய மோசடிகளைத் தவிர்க்கும் நோக்குடன் ஒரு லட்சம் பேரைக் கொண்ட மக்கள் படை ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தாய்நாட்டைக் காக்கும் இயக்கத்தின் அழைப்பாளர் முகுத்தொடுவே ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உருவாக்கப்படும் படையில் இணைந்து செயற்பட ஏழாயிரம் பிக்குகளும் முடிவு செய்துள்ளனர் என்றும் -

இந்துக்கள், முஸ்லிம்களையும் இந்தப்படையில் இணைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (இ-3-20)

## 1989-90 காலச் சம்பவங்கள் குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு பெருமாள் ரணிலுக்கு அழைப்பு

கொழும்பு,செப்.15

1989ஆம், 1990ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நடந்த சம்பவங்கள் தொடர்பாகப் பேசுவதற்கு தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வரதராஜப் பெருமாள் விடுத்த அறிக்கையில் - ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சிக்காரர்களும் சிங்கள மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசிய வேட்பாளர் பட்டியலில் எனது பெயர் சேர்க்கப்பட்டமை குறித்து ஐ.தே.கட்சி தவறான முறையில் பிரசாரம் செய்து வருகிறது. இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் பகிரங்கமாகவே சில கேள்விகளைக் கேட்க இருக்கிறேன் - என்று தெரிவித்தார்.

தமது அழைப்புக்கு ரணில் விக்கிரமசிங்க நேரடியாகப் பதில் கூறாமல் நிராகரித்துவிட்டால் ஐ.தே.கட்சி தனக்கெதிரான பிரசாரங்களைக் கைவிடவேண்டும் எனவும் வரதராஜப்பெருமாள் கேட்டுக் கொண்டார். (இ-8)

## நாடாளுமன்றம் கூடிக் கலைந்தது!

கொழும்பு,செப்.15

கடந்த மாதம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் ஜனாதிபதியின் விசேட உத்தரவுக்கு ஏற்ப நேற்றுக் காலை 10 மணிக்குக் கூடி ஒரு மணிக்குக் கலைந்தது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை விவாதிக்கப்பட்டு 96 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு), ஐ.தே.க.வின் மாற்றுக்குழு ஆகியனவற்றின் உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஜே.வி.பி. ஆகியன எதிர்த்து வாக்களித்தன. ஐ.தே.கட்சியும், புளொட்டும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

## நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டதால் 10 ஆம் திகதி வரை எம்.பியாக பதவி வகிப்பதற்கு வாய்ப்பு!

கொழும்பு,செப்.15

கடந்த மாதம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் நேற்றுக் கூடியதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை பதவிவகிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் பதவி இழந்திருந்த இவர்கள் நேற்று முதல் அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை எம்.பி.பதவிவகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இவர்கள் இலவச தொலைபேசி வசதியைப் பெறுவதுடன் அரைமாதச்சம்பளமாக 12 ஆயிரம் ரூபாவையும் பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் ஒன்றின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் அடுத்த தேர்தலுக்கு முன்னர் மீண்டும் உறுப்பினராகச் செயற்பட வசதியளிக்கப்பட்டது. நாட்டின் வரலாற்றில் இதுவே முதற்தடவை எனக் கூறப்பட்டது. (இ-3)

## கொழும்பில் மஞ்சள் பட்டி இயக்கம்

நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை வலியுறுத்தி மஞ்சள் பட்டி அணியும் இயக்கமொன்று நேற்றுக் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனநாயகத்துக்கான ஒன்றியம் என்ற அமைப்பினர் 10 லட்சம் பேரை ஒன்று திரட்டி இந்தப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று அதிகாலை முதல் மஞ்சள் பட்டியை அணிந்துகொண்டு கொழும்பு நகரின் முக்கிய சந்திகளில் கூடினர்.

தேர்தல் வன்செயல்கள் மோசமாக நடைபெற்றுவரும் இலங்கையில் வன்செயல்களற்ற தேர்தலை வலியுறுத்தி அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இந்த ஒன்றியத்தை உருவாக்கியுள்ளன.(இ-9)

## ஞாயிறன்று விசேட கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,செப்.15

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு விசேட பயணிகள் கப்பல் சேவையொன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருக்கின்றது.

இந்தக் கப்பலில் பயணம் செய்பவர்களுக்கான பயணச்சீட்டு வழங்கும் பணி இன்றும், நாளையும் இடம்பெற இருக்கின்றது.

இன்று நண்பகல் 12 மணிமுதல் 4 மணிவரையும் முன்னூறு பேருக்கும் -

நாளை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் 400 பேருக்கும் - பயணச்சீட்டுக்கள் வழங்கப்படவிருக்கின்றன.

கொழும்பில் நடக்கும் விளையாட்டு விழாவில் பங்குபற்றச் செல்லும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கும் நாளை பயணச்சீட்டு வழங்கப்படவிருக்கின்றது.

இதன் காரணமாக - "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பலுக்கு நாளை விநியோகிக்கப்படவிருந்த பயணச்சீட்டுக்கள் எதிர்வரும் திங்கட்கிழமையே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## யாழ்ப்பாணம் மீதான தமது பிடியை படையினர் பலப்படுத்தி உள்ளனர்!

### கொழும்புத்துறைத் தாக்குதல் குறித்து பலகல்ல கருத்து

கொழும்பு,செப்.15

கொழும்புத்துறையில் நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மீதான படையினரின் பிடியை மேலும் பலப்படுத்தி வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பிய பின்னர் பலகல்ல இதனைத் தெரிவித்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா, விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி ஆகியோரும் இராணுவத் தளபதியுடன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

படையினர் கொழும்புத்துறைப் பகுதியில் நடத்திய நான்கு மணி நேர மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ

(14ஆம் பக்கம் பார்க்க)

## சங்கிலியன் படையினரின் துண்டுப் பிரசுரம் யாழ்.நகரில்

யாழ்ப்பாணம்,செப்.15

சங்கிலியன் படையின் பெயரிலான துண்டுப்பிரசுரம் ஒன்று நேற்று யாழ்.நகரில் சில இடங்களில் வெளியிடப்பட்டன.

இதன் பிரதிகள் குடாநாட்டில் உள்ள திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்புகள், சனசமூக நிலையங்கள் என்பவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

எமது இனிய தமிழீழ மக்களே என்று விளித்து ஆரம்பிக்கப்பட்டுள்ள அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆயிரம் ஆயிரமாகிப்போன இழப்புகள், கோடிக்கணக்கான சொத்து இழப்புகள் எனத் துன்பங்களையும், துயரங்களையும் மட்டுமே சந்தித்த எம் விடுதலைப்போர் இப்பொழுது வெற்றி நோக்கி வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. எமது மக்களின்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கொழும்புக்கு கொண்டுவரப்பட இருந்த 20 கிலோ எடையுள்ள குண்டுகள் சிக்கின!

## ஐ.தே.க. வேட்பாளர் உட்பட ஐவர் கல்முனையில் கைது

கொழும்பு,செப்.15

ஓட்டோ ஒன்றில் கொண்டுவரப்பட்ட 20 கிலோ எடை கொண்ட இரு குண்டுகள் நேற்றுக்காலை கல்முனை - மருதமுனை பொலீஸ் காவல் நிலையத்தில் வைத்து பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இந்தக் குண்டுகள் கொழும்புக்குள் எடுத்துவரப்பட இருந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று கல்முனைப் பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

குண்டுகள் கைப்பற்றப்பட்ட ஓட்டோவின் சாரதி ஐ.தே.கட்சியின் வேட்பாளர் என்றும் - இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஓட்டோவில் பயணம் செய்தவர்கள் மூவர் முஸ்லீம்கள், ஒருவர் தமிழர்.(இ-8)

# மிதிவெடி அகற்றும் பணி தற்போதைக்கு இல்லை

யாழ்ப்பாணம்,செப்.15

குடாநாட்டில் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றும் பணியை மீண்டும் உடனடியாக ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை என்று ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அமைப்பின் யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய யாழ்.மாவட்டத்தின் நிலைமையைப் பொறுத்தவரையில் இன்னும் சில காலங்களுக்கு மிதிவெடிகள் மீட்புப்பணி நடவடிக்கைகள் ஆரம்பமாகாது என்றும் -

கடந்த மார்ச் மாதம் நிறுத்தப்பட்ட இந்தப்பணிகள், குடாநாட்டில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை நிலவினால் மாத்திரமே ஆரம்பிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-8)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.15

தற்காலிக அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வலிகாமம் வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு எஸ். தெட்சணாமூர்த்தி (68, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு), கலோகேந்திரன் (கொக்குவில் கிழக்கு), பநந்தீஸ் (நவாலி கிழக்கு), தெநிதர்சன் (சீங்கம் லேன், உடுவில்) ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-3)


## யாழ். லயன்ஸ் கழகத்துக்கு நன்றி

யாழ். லயன்ஸ் கழகத்தினால் 2000.09.02இல் **அறிவொளி வாசிகசாலை நிலையத்தில்** வைத்து நூற்றுக்கு மேற்பட்டோருக்கு இலவச மருத்துவ பரிசோதனை நடத்தி, மருந்துகள் வழங்கப்பட்டதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்டோருக்கு கண்பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. இவர்களது சேவை தொடர அறிவொளி சனசமூக நிலையத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராம உத்தியோகத்தர்
J/88 - புதிய சோனக தெரு, ஆறுகால்மடம்.
செ.தி.சகுந்தலாதேவி
(78413)

## புன்னாலைக்கட்டுவனில்...

கனேச சனசமூக நிலைய ஆதரவில்
We Serve உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவ முகாம்

இடம் :- புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.
(ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக)
காலம் :- 17.09.2000 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை.

மேற்படி முகாமில்
* கண் பரிசோதனை
* இரத்த அழுத்த பரிசோதனை
* நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை
* நீரிழிவுப் பரிசோதனை என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்.

**கண்பரிசோதனை:**
லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ M.J.F.
வைத்திய நிபுணர்களும், மருத்துவபீட மாணவர்களும்
இந்தப் பரிசோதனைகளை நடத்துவர்.
*அனைவரும் வருக! பயன் பெறுக!*

லயன் வ.ஆறுமுகம் — தலைவர்
லயன் அ.க.த.கிருஷ்ணராசா — செயலாளர்
(78362)

## ராஜா
(யாழ்ப்பாணம்)
கடைசி வாரமாக
கார்த்திக், கௌசல்யா
மற்றும் பலரின் நடிப்பில்
**பூவேலி**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)
18.09.2000 முதல்
இனிய பாடல்கள் நிறைந்த
காதல் காவியம்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
(C/12929)

## நாகம்ஸ்
சுன்னாகம்
ரசிகர்களே!
இன்று முதல்
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன் நடிப்பில்
இனிய பாடல்கள் நிறைந்த
உள்ளம் கொள்ளை
கொள்ளும் பல்சுவை
ததும்பிய காதல் காவியம்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(78411)
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

சிவமயம்
## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் 30ஆம் நாள் இன்று (15.09.2000) வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணி தொடக்கம்-01 - 46 வரையுள்ள சுப வேளையில்

எமது புத்திரி
## திருநிறை செல்வி அனோஜா

அவர்களுக்கு பூப்பு மங்கள மஞ்சள் நீராட்டு ருது சாந்தி செய்ய நிச்சயித்திருப்பதனால், தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி தங்கராசா - தயாநிதி தம்பதிகள்
(திலக்ஷன் லொறி - உரிமையாளர்)
*கதிரிப்பாய், அச்சுவேலி.*
(C/12934)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சி.சுப்பிரமணியம்** (ஜே.பி.)
(தலைவர், தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி.)

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ள எங்கள் சங்கத்தின் தலைவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

தன்னலம் கருதாத சேவையாளர் - பொதுமக்கள் தொண்டன் - என்ன இடர் வந்தாலும் மக்கள் சேவையே மகேசன் சேவையெனக் கருதும் சேவையாளர்.

இன்னல்கள், கஷ்டங்களின் மத்தியிலும் எமது சங்கத்தினை முன்னேற்றிய பெருந் தலைவர். இடம்பெயர்வின் போதும் மற்றும் இந்திய அமைதிப்படை இங்கு நிலைகொண்டிருந்த நாளிலும் அவர் ஆற்றிய சேவை அளப்பெரியது. அவரின் சேவை தொடர எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியாளர்கள்,
தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம்,
கைதடி.

தற்காலிக முகவரி:
*இணுவில் வைத்தியசாலை,*
*இணுவில்.*
(C/12938)

## முன்பள்ளி ஆசிரியர் தேவை
கலைவாணி முன்பள்ளி
பலாலி வீதி, ஊரெழு.

★ O/L சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.
★ அனுபவத்திற்கு முன்னுரிமை
★ விண்ணப்பங்களை 25.09.2000க்கு முன்பாக,

க.கமலகரன்,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு அனுப்பவும். (78396)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை வெற்றிவேல்

முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வெற்றிவேல் அவர்கள் கனடாவில் நேற்று (14.09.2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசமணி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், பொன்னம்பலத்தின் பெறாமகனும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (பொலீஸ்) - கௌரியம்மா (கொழும்பு) ஆகியோரின் மருமகனும், கனடாவில் வசிப்பவர்களான புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகந்தி, ஸ்ரீமதி, துஷ்யந்தி, ஸ்ரீகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரூபன், அருள்நேசன் (றொபின்), ரஞ்சித் ஆகியோரின் அருமை மாமனாரும் திலான், யஸ்னா, கிஷோர, ஹரிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் குமரவேல் (தலைவர் - சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், வலிகாமம் வடக்குப் பிரிவு - விவாகப் பதிவாளர்) அவர்களின் அன்புச் சகோதரனும் திலகவதியின் (செயலாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) மைத்துனரும் விதுஷானி (உடுவில் மகளிர் கல்லூரி), ஜெயப்பிரணவன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.குமரவேல். (சகோதரர்)
*"திருவேரகம்"*
*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*சுன்னாகம்.*
(78414)

## திருமதி துரைராசா மனோன்மணி

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா மனோன்மணி அவர்கள் நேற்று (14.09.2000) காலமானார். அன்னார் ஆறுமுகம் - சவுந்தரத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், செல்வரத்தினின் (லண்டன்) அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரம்பலம், பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும், அம்பலவாணர் கந்தையாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (14.09.2000) வியாவில் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
த.பேரம்பலம் (மைத்துனர்)
*கருங்காலி,*
*காரைநகர்.*
(78416)




மாமனிதர்


பரிதவிக்கும் மக்கள் நிலை குறித்துக் குரல் எழுப்ப
உணர்ச்சித் தமிழா உன் உரிமைக்காகக் குரல் கொடுக்க
**திரு. விஜயரத்தினம் இரத்தினராசா** அவர்களை
ஆதரியுங்கள்
உரிமை உணர்வின் சின்னம் - வெல்லும் சின்னம் சைக்கிள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
திரு. விஜயரத்தினம் இரத்தினராசா
இலக்கம் X

மயிலிட்டி வாழ் மக்கள்



மக்கள் தொண்டன்
(78412)



*செய்தி* :- ஆயுதவிற்பனை தொடர்பாக இந்தியா - இஸ்ரேல் ரக்சியப் பேச்சு!
அமெரிக்கா தடுக்கும் என்று அச்சம்!!

# ஐ.நா.வின் தடைகள் தொடர்பாக ஈராக் நிலையில் மாற்றமில்லை

## பிரான்ஸ் அமைச்சர் கருத்து

ஐ.நாவின் பொருளாதாரத் தடைகள் குறித்த ஈராக்கின் நிலைப்பாடு மாறவில்லை என்று பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர் ஹியபேர்ட் பேட்ரீன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் பிரதி முதலமைச்சர் தாரீக் அஜீசுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே அவர் இக்கருத்தைக் கூறியுள்ளார்.

1991இல் குவைத்தை அத்துமீறி ஆக்கிரமித்ததற்காக ஈராக் மீது ஐ.நா. பன்னாட்டுப் படைகள் தாக்குதல் நடத்தியதிலிருந்து ஐ.நா.சபை ஈராக் மீது தொடர்ச்சியான பல பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்துகிறது.

அத்துடன் ஐ.நா. ஆயுதக்கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் நாசம் விளைவிக்கும் ஆயுதங்கள் குறித்து தேடுதல் பணிகளையும் மேற்கொண்டனர்.

ஆரம்பம் முதல் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த ஈராக் 1998 டிசெம்பரில் ஐ.நா.ஆயுத கண்காணிப்பாளர்களை நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதி மறுத்து விட்டது.

அதிலிருந்து தடைகளை மேலும் தீவிரப்படுத்திய போதும் ஈராக் ஐ.நாவின் நிபந்தனைகளுக்குப் பணிய மறுத்து வருகிறது.

இந்நிலையில் ஈராக்கை ஐ.நா. நிபந்தனைகளுக்கு சம்மதிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட பிரான்ஸின் வெளிநாட்டமைச்சர் பேர்ரின் ஈராக் பிரதி முதலமைச்சர் அஸீசுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் ஐ.நாவின் தடைகளால் ஈராக்கைப் பணிய வைக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

குவைத்தில் ஊடுருவிய ஈராக்கை பன்னாட்டுப் படைகள் வெளியேற்றி 9வருடங்களின் பின்னரும் ஈராக் மீது தடைகள் தொடர்வதை பிரான்ஸ் அதிபர் ஜேகுஸிஸ் சிராக் கண்டித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## கர்நாடக மாநிலத்தில்

# ராஜ்குமாரை விடுவிக்கக் கோரி ரசிகர்கள் இன்று ஆர்ப்பாட்டம்!

## வன்முறை குறித்து தமிழர்கள் அச்சம்!!

**பெங்களூர்,செப்ரெம்பர்,15**

**வீரப்பனால் கடத்தப்பட்டுள்ள நடிகர்ராஜ்குமாரை விடுவிக்கக்கோரி அவரது ரசிகர்கள் இன்று கர்நாடகாவில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.**

**இதனால் அங்கு தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என அஞ்சப்படுகின்றது.**

பெங்களூரில் நடைபெற்ற ராஜ்குமார் ரசிகர்கள் மன்றக் கூட்டத்தில் மாநிலம் முழுவதிலும் இருந்து வந்து கலந்து கொண்டவர்கள் எடுத்த முடிவுக்கிணங்க இன்று ராஜ்குமாரின் விடுதலையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக மன்றத் தலைவர் கோவிந்த் தெரிவித்தார்.

நடிகர் ராஜ்குமாரின் மகன்களான சிவராஜ்குமார், ராகவேந்திர ராஜ்குமார் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டபோதும் ரசிகர் மன்ற நிர்வாகிகள் 'இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது' என்று கூறி ஆர்ப்பாட்டத்தைக் கைவிட மறுத்து விட்டனர்.



ராஜ்குமார்

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ரசிகர்கள் ஆவேசத்தால் அங்கு வாழும் தமிழர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் என்று அச்சம் எழுந்துள்ளது.




## இந்தியாவுக்கு சீனா கோரிக்கை!

பெய்ஜிங்,செப்.15

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானையும் பேச்சுக்களில் இந்தியா சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்கி வலியுறுத்தியுள்ளார்.

# 7500 ஆண்டுகள் பழமையான புராதன நகரம் கண்டுபிடிப்பு!

வாஷிங்ரன்,செப்.15

கருங்கடலின் அடியில் 7500 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதகுலம் வாழ்ந்த நகரம் ஒன்றின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புகழ்பெற்ற டைட்டானிக் கப்பலின் அழிவுகளைக் கண்டு பிடித்த ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் ரொபேர்ட் பல்லட் இந்த புராதன நகரம் குறித்துக் கூறுகையில், கடலின் அடித்தளத்தில் இருந்து சுமார் 300 அடிகளின் கீழ் விளைநிலங்கள் மற்றும் குடியிருப்புகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகவும், பைபிளில் கூறப்பட்டுள்ள 'நோவாவின் பேழை' என்ற வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட பெரும் வெள்ளத்தின் போது அழிந்த நகரமாக இது இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

தேசிய பூகோள ஆய்வுக்கழகம் இந்தப் புராதன நகரைக் கண்டு பிடித்துள்ளது. (ஓ-4)

## இராணுவ ஆட்சியாளரின் தடையை மீறி

# பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவரானார் பெனாஸிர்



பெனாஸிர் பூட்டோ

இஸ்லாமாபாத்,செப்.15

இராணுவ ஆட்சியாளர்களின் சட்டத் தடையை மீறி பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆயுட்காலத் தலைவியாக முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஊழல் வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட பெனாஸிர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கத் தகுதியற்றவர் என்று நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்ததை அடுத்து நாட்டை விட்டு வெளியேறி பிரிட்டனில் இருந்து கொண்டே கட்சிப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

இதற்கிடையில் ஊழல் வழக்குகளில் குற்றவாளியாகத் தண்டனை பெற்றவர்கள் அரசியல் கட்சிகளில் பதவி வகிக்கக்கூடாது என்று இராணுவ ஆட்சியாளர்கள் அவசரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினர்.

இந்த சட்டத் தடையை மீறியே மக்கள் கட்சியின் வருடாந்தர மாநாட்டில் ஆயுட்காலத் தலைவியாக பெனாஸிர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# இன்று ஒலிம்பிக் ஆரம்பம்



**ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஒலிம்பிக் போட்டிகள் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகி 17நாள்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தமது நாட்டில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளால் மகிழ்ச்சி அடைந்துள்ள ஆஸ்திரேலிய சிறுவர்கள் முகங்களில் ஒலிம்பிக் சின்னங்களை வர்ணங்களால் தீட்டியபடி ஒலிம்பிக் கொடிகளுடன் குதூகலிக்கும் காட்சி.**

# மூன்றாம் உலகைப் பாதுகாக்க கோபி அனான் வலியுறுத்தல்!

## வல்லரசுகளையும் சாடினார்!!

நியூயோர்க்,செப்.15

மூன்றாம் உலக நாடுகளின் குரல்கள் உரத்து ஒலிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அந்த நாடுகளின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் மறைமுகமாக வல்லரசு நாடுகளைச் சாடியுள்ளார்.

ஐ.நா.சபையின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய கோபி அனான் -

குறிப்பிட்ட ஒரு பிரிவினரின் விருப்பத்துக்கு ஏற்ப ஐ.நா. செயற்படாது என்று வலியுறுத்தினார்.

ஐ.நாவின் மீது நம்பிக்கை வைத்துள்ள தேசங்களை பாதுகாப்பதற்கு வழியின்றி மீண்டும் தத்தளிக்கும் நிலை சபைக்கு ஏற்படக்கூடாது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா உட்பட வல்லரசு நாடுகளையே சிறுகுழுவினர் என்று குறிப்பிட்டு கோபி அனான் சாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஓ-4)

# இந்தோனேசியாவில் குண்டு வெடிப்பு

ஜகார்த்தா,செப்.15

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள பங்கு பரிவர்த்தனை நிலைய வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரில் பொருத்தியிருந்த வெடிகுண்டு வெடித்ததில் 15பேர் கொல்லப்பட்டனர். 30பேர் படுகாயமடைந்தனர்.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் அதிபர் சுகார்ட்டோ நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய தினத்துக்கு முதல நாளான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்புக்கு சுகார்டோவின் ஆதரவாளர்களே காரணம் என்று கூறப்படுகிறது.

நேற்று நீதிமன்றத்தில் சுகார்டோ ஆஜராகவில்லை. மன, உடல் ரீதியாக மோசமாக அவர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகார்டோவின் மருத்துவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

(ஓ)

கண்மூடித்தனமாக ஆதரிக்கவும் மாட்டோம்!
கண்மூடித்தனமாக எதிர்க்கவும் மாட்டோம்!
முறையான அரசியல் தீர்வுக்காய் போராடுவோம்!
உருப்படியான தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்போம்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X

(78211)

# கண்ணீர் அஞ்சலி

யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியை

திருமதி புனிதவதியார் சிவகடாட்சம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் இ. நமசிவாய தேசிகர்

அவர்களின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா / அல்வாய் சின்னத்தம்பி
வித்தியாலயம்.

78404)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் இராசதுரை

சுதுமலை வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் இராசதுரை நேற்று (14 — 09 — 2000) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், சிராளராசா, ஆனந்தராசா, கமலா, இராசவேலு (ஜேர்மனி), வசந்தி, புஸ்பராணி (பிரான்ஸ்), செல்வராணி, யோகராணி, செல்வகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரோஜினிதேவி, சாந்தகுமாரி, மகேந்திரராசா, குமுதா (ஜேர்மனி), வேலழகன் (பிரான்ஸ்), பாலேந்திரா (Lanka Cement) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், சசிகுமார், ஜெயகுமார், மாலினி (ஜேர்மனி), லினித் (ஜேர்மனி), லினுசா (ஜேர்மனி), உசாந்தினி, உமாலினி, உசாந்தன், தர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14-09-2000) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
இ. ஆனந்தராசா
(மகன்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(78383)

## கிருஷ்ணபிள்ளை சிவலிங்கம்

(விநாயகர் ஸ்ரோர்ஸ் – கொழும்பு)

அம்பலவாணர் வீதி, கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை சிவலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (13 09- 2000) புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், அனுஷா (சுவிஸ்), கௌசலா (ஜேர்மனி), ஆதித்தன் (கனடா), அஜந்தா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை (16-09-2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
தளையசிங்கம் தவராணி
(சகோதரி)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(78390)

## சபாரட்ணம் சிறீகரன்

(கட்டைசிறி)

186/2, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சபாரட்ணம் சிறீகரன் அவர்கள் 2000—09—13 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் திருமதி பரஞ்சோதி — சபாரட்ணம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், சத்தியதேவியின் பாசமிகு பெறாமகனும், மிருதுளா (கனடா), பிரேமிளா (கனடா), சியாமளா, வத்சலா, பிரபாகரன் (பிரான்ஸ்), நிரஞ்சலா (வட. கிழ. மா. சபை, திருமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராகவன் (கனடா), சின்னத்துரை (கனடா), சுதர்சனன்(யாழ். பல்கலைக்கழகம்), செல்வகுமார் (வட. கிழ. மா. சபை, திருமலை) ஆகியோரின் மைத்துனரும், கிஷோர், பிரதீஷ், சின்ஷயா, ருக்மாங்கன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15—09—2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:–
க. சுதர்சனன்
(மைத்துனர்)

186/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(78401)

## முன்பள்ளி ஆசிரியருக்கு ஊக்குவிப்புப் படி

வலி. கிழக்கு, செப். 15

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் இயங்கிவரும் முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அடுத்த வருடம் தொடக்கம் ஊக்குவிப்புப் படியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதேசசபைத் தலைவர் எஸ் மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நல்லூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சனசமூக நிலையங்களின் நிர்வாக அங்கத்தவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ–180)

## செஞ்சிலுவை சின்ன விழிப்புணர்வு நாள்

யாழ்ப்பாணம், செப். 15

செஞ்சிலுவைச் சின்னத்தை செஞ்சிலுவை ஸ்தாபனங்கள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் பயன்படுத்துவது உகந்ததல்ல என்பதனை வலியுறுத்தும் நாள் இன்று செப்ரெம்பர் பதினைந்தாம் திகதியாகும்.

செஞ்சிலுவைச் சின்னத்தை செஞ்சிலுவை நிறுவனங்கள் மட்டுமே பயன்படுத்த வலியுறுத்தவும், மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனைத்துலக மட்டத்தில் இன்று பிரசாரம் செய்யப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையும் இந்த விழிப்புணர்வு செயல் திட்டங்களை இன்று முன்னெடுப்பதாக அதன் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்தார். (அ)

## ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி

வடமராட்சி, செப். 15

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் தேசிய கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் ஒருவருட கால முழுநேர ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறியை அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் வதிரியில் உள்ள பயிற்சி நிலையத்தில் நடத்தவுள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த 25 வயதுக்குட்பட்ட— பாடசாலைகளை விட்டு விலகிய — இருபாலாரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 22 ஆம் திகதியாகும். பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை கழகத்திடம் பெற்று விண்ணப்பங்களை 'வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ–173)

## மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டி

வலிகாமம் தெற்கு, செப். 15

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வரும் மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளன.

இப்போட்டிகளில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 42 விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றி வருகின்றன.

(ஐ–152)

## ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர் நாடகம் மேடையேற்றம்

கோப்பாய், செப். 15

யாழ். அரங்க செயற்பாட்டுக்குழுவும் 'யுனிசெவ்' அமைப்பும் இணைந்து சிறுவர்களின் உளநலமேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர் நாடகங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

'கூடிவிளையாடு பாப்பா' 'முயலார் முயல்கிறார்' ஆகிய நாடகங்களை வலிகாமம், யாழ்ப்பாண கல்வி வலயங்களுக்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளில் 20 இடங்களில் மேடையேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாத நடுப்பகுதியில் இருந்து இவை மேடையேற்றப்படும். ஏற்கனவே நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த மக்களின் மனக்குறையைப் போக்கும் முகமாக 'கோலம் கொண்டோம்' என்னும் மரநிழல் நாடகம் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-72)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தையா குணரத்தினம்

(B.Sc. DIP. IN ED.)

(முன்னாள் அதிபர், யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி)

13 – 09 – 2000 புதன்கிழமை வண்டனில் அமரத்துவம் எய்திய எமது முன்னாள் அதிபரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/ நெ. ம. ம. வி.

(78405)

# இதய அஞ்சலி

எமது செயலகத்தில் கடமையாற்றும்

திரு. சு. கந்தராசா
அவர்களின் அன்புச் சகோதரர்

## அமரர் டாக்டர் சுப்பிரமணியம் தியாகராசா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு,
உடுவில்.

(78408)

# கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் மத்தி காளிகோயில்
நிர்வாகசபைத் தலைவர்

## க. இராசலிங்கம்

(கடடப்பொம்மன்)

அவர்கள் நேற்று (14-09-2000) இறைவனடி சேர்ந்தமையையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிர்வாகம்,
காளிகோயில் தேவஸ்தானம்.

(78410)

# மரண அறிவித்தல்

## கனகசபை இராசலிங்கம்

(கட்டப் பொம்மன்)

கோப்பாய் காளி கோயிலடியைச் சேர்ந்த கனகசபை இராசலிங்கம் (முன்னாள் கிராம சபை உறுப்பினர்) 14 – 9 – 2000 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் கனகசபை — அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் நேசம்மா மற்றும் மங்களம், இராசையா, வில்லியம்மா ஆகியோரின் சகோதரரும், அமரர் தணிகாசலம் மற்றும் செல்லத்துரை, நாகபூரணி, துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், அம்பிகை நடராஜா (ஜேர்மனி), சோமாஸ்கந்தராசா (ஜேர்மனி), அகிலரூபன் (ஜேர்மனி), நீலமோகன் (மலேசியா), இரங்கநாயகி, சத்தியபாமா, சத்தியரூபன் (இத்தாலி), சத்தியநாதன், சத்தியசீலன், சத்தியபாமினி ஆகியோரின் மாமனாரும், அனிதா (ஜேர்மனி), வரதன் (டோகா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (15 – 9 – 2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சகோதரர்கள்
க. இராசையா

காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(78409)

# உதயன்

## சந்தேகம் தரும் நிலையே!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஒரு புறமும் இராணுவத் தாக்குதல்கள் மறுபுறமாகவும் உள்ள முரண்பாடான நிலை குறித்து ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் எழுதிவிட்டோம்.

தேர்தல் களத்தில் குதித்துள்ள அரசியல் கட்சிகளும் போர்க் களத்தை இல்லாமற் செய்யுமாறு சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளன. எனினும் இதனை எழுதும்வரை, இராணுவத் தாக்குதல்களை அரசபடைகள் நிறுத்தி, தேர்தலுக்கு உகந்த அமைதிச் சூழ்நிலையை உருவாக்க வகை செய்யப்படுமா என்பது குறித்த முடிவு எதுவும் தெரியவரவில்லை.

யாழ்ப்பாணத்தில் போரையும் நடத்திக் கொண்டு, பொதுத் தேர்தலையும் வைக்கமுடியும் என்று அரசாங்கம் கருதுமானால், மோசடி மிகுந்த, அநீதியான வழிக்கு அது துணைபோக விரும்புகிறது என்பதே அர்த்தமாகிவிடும்.

ஜனநாயகத்திலும் மக்களின் உரிமைகள் பேணப்படுவதிலும் அக்கறை உள்ள தரப்பாக வெளியே பேசிவரும் அரசாங்கம், அநீதியான, நேர்மையற்ற, மோசடி மிகுந்த தேர்தலை நடத்துவதற்கு விரும்பாது என்றே நம்புகிறோம்.

குடாநாட்டில் வாழும் மக்களின் இன்றைய நிலை எத்தகையது என்பதனை அரசாங்கம் அறியாதிருக்க முடியாது. தள நிலைமையை இங்குள்ளவர்கள் கூறித்தான் அரசுக்குத் தெரிய வேண்டும் என்பதும் இல்லை. எனினும் தேர்தலை உரிய முறையில், அமைதியான சூழ்நிலையில் நடத்த வேண்டும் என்று இங்கு வாழும் மக்களும், இங்கு வந்துள்ள அரசியல் வாதிகளும் எடுத்துக் கூறியும், கோரிக்கை விடுத்தும், இன்னும் அரசு சாதகமான முடிவு எதனையும் தெரிவிக்காதிருப்பது விசனத்துக்குரியதாகும்; சந்தேகத்தை தருவதுமாகும்.

தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையத்தின் பிரதிநிதி ஒருவர் நிலைமையை நேரில் அறிய யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். அதன் பின்னர் மேற்படி நிலையம் வெளியிட்ட அறிக்கையில், யாழ்ப்பாண மாவட்டம் குறித்து விசேடமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் ஏனைய மாவட்டங்களைவிட, யாழ்ப்பாணத்தில் அசாதாரணமான சூழ்நிலை நிலவுகிறது என்பதனை அந்த அறிக்கை வெளிச்சமாகத் தெரிவிக்கிறது.

உயிர் வாழ்வுக்கே அச்சம் கொண்ட மக்களாக குடாநாட்டு மக்கள் காணப்படுகிறார்கள். அதற்கான காரணம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவத் தாக்குதல்களே. மக்களின் அன்றாட வாழ்க்கையை இராணுவத் தாக்குதல்கள் - போர்ச் சூழ்நிலை - வில் வளைவாக இறுக்கிக் கொண்டுள்ளது - மூடிக்கொண்டுள்ளது.

அதன் காரணமாக - ஜனநாயகத்தை - அது குறித்த எல்லாச் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் - யாழ்ப்பாணத்து மக்கள் தேவையற்ற ஆடம்பரமாகக் கருதும் நிலை உருவாகியுள்ளது - என்று அறிக்கை குறிப்பிடுகிறது.

கண்காணிப்பு நிலையத்தின் பிரதிநிதி இங்குள்ள யதார்த்த நிலையை ஆழமாக பார்த்துச் சென்றிருக்கிறார்!.

ஆகையால், குடாநாட்டில் தேர்தல் அர்த்தமுள்ள வகையில் நடைபெற வேண்டுமாயின் அதற்கான முன் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியது அவசியம் என்ற அவரது கருத்து கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்புகளும் எதிர்கணைத் தாக்குதல்களை நடத்துவதால், பெரும் எண்ணிக்கையான மக்கள் தாங்கள் இல்லங்களை விட்டு இடம்பெயர்ந்து விட்டனர். ஆகையால் அவர்கள் தமது வாக்குரிமையை தளை நீக்கப்பட்ட உணர்வுடன் - பயன்படுத்தக் கூடிய - அதற்கு உகந்த 'சூழ்நிலை - இங்கு இல்லை என்றும் பிரஸ்தாப அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்த யதார்த்த நிலையை அரசு எப்போது உணரப் போகிறது? உணர்ந்தாலும் உண்மையான தேர்தலுக்கு உதவ முன்வருமா?

# விமானங்களின் பேரிரைச்சல் மாணவர் கல்விக்கு இடையூறு

## ஜனாதிபதிக்கு ஆசிரியர் சங்கம் முறையீடு

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ். மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பாடசாலை நேரங்களில் நடத்தப்படும் 'மிக்' விமானத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கி வேட்டுக்களின் சத்தங்கள் என்பவற்றினால் மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்த 'பக்ஸ்' செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இடம்பெயர்ந்து பல்வேறு இடையூறுகள், கஷ்டங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன. அதேநேரம் இடம்பெயர்ந்த மக்களும் இப்பாடசாலைகளில் தங்கியிருப்பதனால் பாடசாலைகளின் அன்றாடக் கடமைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் உள்ள பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த நிலைமையைப்போக்கி மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு வழிவகுக்க வேண்டும் - என்று அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## லக்ஸ்மன் ஜெயக்கொடி இந்தியா செல்வார்

கொழும்பு,செப்.15

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்காகவும் மீன்பிடிப் படகுகளை மீட்பதற்காகவும் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கலாசார விவகார அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி விரைவில் புதுடில்லி செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக புதுடில்லி செல்லுமாறு லக்ஸ்மன் ஜெயக்கொடி கேட்கப்பட்டிருப்பதாக 'டெய்லி மிரர்' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரதி மீன்பிடித்துறை அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவும் தம்முடன் புதுடில்லி செல்லவுள்ளதாக அமைச்சர் ஜெயக்கொடி கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சுமார் 130 இலங்கையர்களை விடுவிக்கும் பேச்சுக்களில் இவர்கள் இருவரும் இந்திய அதிகாரிகளுடன் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் 30 படகுகளும் அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளன. (ஐ-20)

## உயிரிழந்த மேலும் பத்து புலிகள் விவரம் அறிவிப்பு

வவுனியா,செப்.15

கடந்த 10ஆம் திகதி அரியாலைப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'சூரியக் கதிர்' படை நடவடிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழந்த பத்துப் பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்றுக்காலை அறிவித்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ தமிழ் அல்லது மது (இராசையா யோகராணி - கிளிநொச்சி)

★ தமிழரசி அல்லது இயலினி (இராசகோபால் துஷாந்தினி - முல்லைத்தீவு)

★ சுடர் (நடேசபிள்ளை சுலோசனா - யாழ்ப்பாணம்)

★ இளநிலா (சண்முகராசா காயத்ரிதேவி - யாழ்ப்பாணம்)

★ மேஜர் கண்ணகி (நடராசா கோகிலராணி - யாழ்ப்பாணம்)

★ முடியழகி அல்லது ஆனந்தி (அமிர்தலிங்கம் விஜிதா - யாழ்ப்பாணம்)

★ மேஜர் செல்வமலர் (நடராசா உமா - யாழ்ப்பாணம்)

★ நவநந்தினி (சிவஞானசுந்தரம் பத்மினி - மணலாறு)

★ கடற்செல்வி (நடேசமூர்த்தி கவிதா - யாழ்ப்பாணம்)

★ சிறப்பு எல்லைப்படை வீரர் கப்டன் சிவலோகன் அல்லது அலக்ஸ் (தவராசா ராசரத்தினம் - மட்டக்களப்பு) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். (ஐ-8)

## மேலும் இரு இடங்களில் மக்கள் வங்கி கருமபீடங்கள்

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ். மாவட்டத்தின் மக்கள் வங்கியின் கருமபீடங்கள் மேலும் இரண்டு இடங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

அண்மைக்காலமாகக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடும் சேவையை விஸ்தரிக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இவை அமைக்கப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் வடபிராந்தியத் தலைமையக உதவிப் பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்தின் கட்டடத்தில் வங்கியின் நீடித்த கருமபீடமும், அச்சுவேலிப் பகுதி விவசாயிகளதும் பொதுமக்களதும் நன்மைகருதி அப்பிரதேசத்தில் வங்கியின் நடமாடும்சேவைக் கருமபீடமும் விரைவில் செயற்படவுள்ளன.

வாடிக்கையாளர்கள் 'ஜனஜய' மற்றும் சாதாரண சேமிப்புக் கணக்கு வைப்புக்களை மேற்குறிப்பிட்ட கருமபீடங்களில் மேற்கொண்டு பயனடையலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## மனித உரிமைக்குழு முன் பொலீஸ் அதிகாரி சாட்சியம்!

உதவிப் பொலீஸ்மா அதிபர் ரண்மல், மனிதஉரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக கடந்த செவ்வாயன்று அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்கள் ஐவர் சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்பட்டமை மற்றும் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்பட்டமை தொடர்பாகவே சாட்சியமளிக்க அவர் அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரண்மல், பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் மகன் ஆவார். (ஐ-20)

## நிறுவை உபகரணங்களுக்கு முத்திரை

நிறுவை அளவை உபகரணங்களுக்கு 2000ஆம் ஆண்டிற்கான முத்திரையிடும் பணி எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை வலி.கிழக்குப் பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறும் என்று நிறுவை அளவைப் பகுதி அதிகாரி கே.நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

### உதயவாக்கு

**வாழ்வில் வெற்றி பெறுவது மட்டும் நமது வேலையல்ல; தொடர்ந்துவரும் தோல்விகளையும் உற்சாகம் குன்றாமல் ஏற்றுக்கொள்ளவதும் நமது வேலைதான்.**

*- ராபர்ட் லூயி ஸ்டீவென்ஸன்*

### நாளை

**ஆவணி 31**

**சனிக்கிழமை**

*திதி:* திருதியை பின்னிரவு 1.13 வரை.

*நட்சத்திரம்:* ரேவதி பிற்பகல் 2.30 வரை.

*சுபநேரம்:* 3.03 - 4.33

*ராகுகாலம்:* 9.03 - 10.33

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சஞ்சிகை வெளியீடு

ஊரெழு ஸ்ரீ சத்யசாயி மண்டலி 'குருசங்கல்ப' சஞ்சிகை வெளியீடும் 9ஆம் ஆண்டு நிறைவுதின நிகழ்வும். நாளை சனிக்கிழமை நிலைய மண்டபத்தில் மனிதமேம்பாட்டுக் கல்வி மாவட்ட இணைப்பாளர் கே.வி.சிவனேசன் தலைமையில் நடைபெறும்.

'குருசங்கல்பம்' சஞ்சிகையை வடபிராந்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுத்தலைவர் வே. சேனாதிராசா வெளியிட்டுவைக்க பதில் நீதிவான் கே.அரியநாயகம் முதல் பிரதியைப் பெறுவார். யாழ்ப்பாணம், மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க-173)

## பொதுஅறிவு போட்டி

வலிகாம வலயத்திற்கு உட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்டங்களுக்கிடையிலான கோட்டமட்ட மனைப்பொருளியல் பொதுஅறிவுப் போட்டி நாளை சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் காலை 9.00மணியளவில் நடைபெறவுள்ளது.(ஐ-ரி)



யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய லொறி உடற்கட்டமைப்புச் செய்து வெள்ளோட்டம் விடப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

படத்தில் சங்கத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் உட்பட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் சங்க இயக்குநர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் லொறிக்கு உடற்கட்டமைப்பு செய்த நிறுவன உரிமையாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம். *படம்: பா.நந்தகுமார் (அரியாலை செய்தியாளர்)*

## யாழ்.வேட்பாளர்களின் இலக்கங்கள் அறிவிப்பு

யாழ். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடவிருக்கும் 14 அரசியல் கட்சிகள் மற்றும் 6 சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்களின் இலக்கங்களை யாழ்.தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வேட்பாளர் பட்டியல்களும் அவர்களின் இலக்கங்களும் உதயனில் வெளியிடப்படும். மூன்று அணிகளின் விவரம் இன்று கீழே தரப்படுகின்றன.

### ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

**சின்னம் - வீணை**

| வேட்பாளர் பெயர் | இலக்கம் |
|---|---|
| ★ கந்தையா சங்கரன் | 1 |
| ★ கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் | 2 |
| ★ கார்த்திகேசு வேலும்மயிலும் குகேந்திரன் | 3 |
| ★ டக்ளஸ் தேவானந்தா | 4 |
| ★ தம்பித்துரை சிவகுமாரன் | 5 |
| ★ தியாகராஜபிள்ளை மாணிக்கத் - தியாகராசா செல்வராசா | 6 |
| ★ துரைராஜா பாஸ்கரன் | 7 |
| ★ நடராசா மதனராசா | 8 |
| ★ முஹம்மட் அப்துல் கபூர் சபதுல்லா | 9 |
| ★ சங்கரப்பிள்ளை சிவதாசன் | 10 |
| ★ சின்னத்துரை தவராசா | 11 |
| ★ செல்வராசா சிறிதரன் | 12 |

### ஐ.தே.க

**சின்னம் - யானை**

| வேட்பாளர் பெயர் | இலக்கம் |
|---|---|
| ★ கந்தையா வீரசிங்கம் | 1 |
| ★ கந்தசாமி நந்தகுமார் | 2 |
| ★ கோபாலபிள்ளை ஜெயந்திரா | 3 |
| ★ தியாகராஜா மகேஸ்வரன் | 4 |
| ★ நாகலிங்கம் நாகராஜா | 5 |
| ★ பொன்னையா சிவபாதம் | 6 |
| ★ முத்துத்தம்பி கனகசுந்தரம் | 7 |
| ★ சந்திரலிங்கம் சிறீகஜன் | 8 |
| ★ சண்முகம் சிவலிங்கராஜா | 9 |
| ★ சபாரத்தினம் ஜெயரட்ணம் | 10 |
| ★ சிதம்பரப்பிள்ளை இராசதுரை | 11 |
| ★ சோமசுந்தரம் சிவா | 12 |

### ஜே.வி.பி

**சின்னம் - மணி**

| வேட்பாளர் பெயர் | இலக்கம் |
|---|---|
| ★ நாராயணசாமி இராசகோபால் | 1 |
| ★ பக்கீர் கிருஷ்ணமூர்த்தி | 2 |
| ★ பழனியாண்டி சாந்தமலர் | 3 |
| ★ பிச்சை லோகநாதன் | 4 |
| ★ பேச்சிமுத்து நடராசா | 5 |
| ★ மாரிமுத்து கனககுமார் | 6 |
| ★ முருகன் ஜயாபுரி வேலுமணிவண்ணன் | 7 |
| ★ மெய்யப்பன் இராசையா | 8 |
| ★ இராமலிங்கம் அரியமுத்து | 9 |
| ★ சுந்தரம் கணேசமூர்த்தி | 10 |
| ★ சுப்பையா இரட்ணசபாபதி | 11 |
| ★ செல்லையா நடராசா | 12 |

ஏனைய கட்சிகளின் விவரங்கள் பின்னர் வெளிவரும். (ஐ-9)

# காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் தந்தை பெரியாரின் தலைமைத்துவம்

**திராவிட இயக்கத்தின் பெரும் தலைவர் பெரியாரின் 90 ஆவது பிறந்த நாள் இன்றாகும். அதனை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

பெரியார் இராமசாமி திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர். தமிழகத்தின் பொது வாழ்வில் "ஐயா" என்றும் 'தந்தை' என்றும் அனைவராலும் அழைக்கப்படும் தகுதியைப் பெற்றவர்.

அவர் ஒரு "ரிஷ்வா" லெனின்! சனநாயகத்தில் நம்பிக்கையற்றவர். சாதனை புரிய வேண்டுமென்றால் அது சர்வாதிகாரத்தால்தான் முடியும் என்ற கொள்கையினர். "எனக்கு முட் டாள்கள்தான் தேவை" என்று பகிரங்கமாகவே பேசிய தலைவன் உலகத்திலேயே பெரியார் ஒருவராகத்தான் இருக்கமுடியும்!

அத்தகைய சர்வாதிகாரத் தலைவனிடம் சீடராக இருந்துதான் சனநாயகத் தூதுவரான அண்ணா தோன்றினார். இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் தலைவர்களில் அண்ணாவை மிஞ்சிய சனநாயகவாதி வேறு எவரும் இல்லை எனலாம்!

அவரது கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களான தனது தம்பிமார்கள் இராணுவத் தளபதிகள் போலப் பயிற்சி பெறவேண்டும்; ஆனால் சனநாயக அடிப்படையில் எல்லோருக்கும் சமவாய்ப்புக் கிடைக்க வழி செய்யவேண்டும் என்ற பரந்த நோக்கத்துடனே முன்னேற வேண்டுமென விரும்பினார். அதற்கிணங்க 1957 இல் திருச்சி மாநில மாநாட்டில் "தம்பி வா, தலைமை ஏற்க வா; உன் ஆணைப்படி நாம் நடப்போம்" எனச் சொல்லி நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களை அழைத்து, கழகத்தின் பொதுச்செயலாளர் பதவியை மனமுவந்து அளித்துவிட்டு, கழகத்தின் சாதாரண உறுப்பினராக இருந்துகொண்டார்.

1967இல் ஆட்சிக்கு வந்த அண்ணா அவர்கள் கொடிய புற்று நோய்க்கு ஆட்பட்டு 1969-02-03 இல் மீளாத்துயில் கொள்ளாதிருந்திருந்தால் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமே தொடர்ந்தும் ஆட்சியில் இருந்திருக்கும்; அதன் மூத்த - முன்னணி - உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராக முதலமைச்சர் பதவியை வகித்திருப்பர். தானொரு கௌரவ உறுப்பினராக - வழிகாட்டியாக - மட்டும் இருந்து கொண்டு பல மூத்த தொண்டர்களை அமைச்சராக்கி அழகு பார்த்திருப்பார்.

**அ.பொ.செல்லையா**

கட்சிகளுக்குள் உட்பூசல்களுக்கு மூல காரணம் அதிகார - தலைமைத்துவப் போட்டியாகும். சனநாயக வாதியாகவும் உளவியல் ஞானியாகவும் விளங்கிய அண்ணா அதில் மிகுந்த கவனம் செலுத்தி எளிமையைப் பேரிதும் விரும்பினார்.

சொல்லின் செல்வர் ஈ.வி.கே. சம்பத் கூட அவசரப்படாதிருந்திருந்தால் கழகத்தின் தலைமைத்துவம் கூடச் சம்பத் அவர்களுக்கு ஒருக்கால் சென்றிருக்கமுடியும். கழக நிகழ்ச்சிகளின் தலைவராகச் சம்பத் அவர்கள் விளங்கி உள்ளார். அண்ணாவழித் தம்பிகள் பலர்



தலைமைத்துவப் போட்டியால், பிரிந்து, புதுப்புதுக் கட்சிகளைத் தொடங்கி ஒருவரை ஒருவர் தாக்கவும் செய்கின்றனர்!

தந்தை பெரியாரிடமிருந்து அவரது திருமணம் காரணமாகப் பிரிந்தாலும் பெரியாருக்குரிய தலைமைத்துவக் கதிரை அவருக்காகவே விடப்பட்டு, பொதுச் செயலாளர் பதவி மட்டுமே கழகத்தில் இருந்தது.

## பெரியாரின் திருமணம்

சொத்துக்களின் வாரிசு ஒருவரை நியமித்து, அவர் மூலம் தனக்குப்பின் திராவிடர் கழகத்தை வழிநடத்திட வாரிசு உரிமையை மணியம்மை அவர்களுக்குக் கொடுத்திடச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட சட்ட ஒழுங்குதான் பெரியார் - மணியம்மை திருமணம் என்பது.

இத் திருமணம் பெரும் கருத்து மோதல்களை இயக்கத்தொண்டர்களிடையே ஏற்படுத்தியது. இதனால் கழகத் தோழர்களுக்கு விளக்கமளித்தார் பெரியார்.

"நான் மணியம்மையைத் திருமணம் செய்யவில்லை. எனக்குப் பின் எனது சொந்தச் சொத்துக்களும், கழகச் சொத்துக்களும் வருமானங்கள் என்பவற்றைப் பாதுகாக்கவும் எனக்குப் பின் இயக்கத் திற்குப் பயன்படவும் சேர்ந்துள்ள அதிகமான பட்டதாரிகள் பிற்காலத்தில் இச்சொத்துக்களை அரசியலுக்குப் பாவித்து அழிப்பதைத் தடுக்கவும் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளேன். என்னைப் பொறுத்தவரை அன்றும், இன்றும், என்றுமே மணியம்மை என் மகள்தான். ஆனால் சட்டப்படி வாழ்க்கைத் துணைக்கே சொத்து உரித்தாகும். அதற்காகவே அவரை வாழ்க்கைத் துணைவியாக்க ஏற்பாடு செய்தேன். அதாவது சட்டத்துக்கு மட்டுமே அவர் என் வாழ்க்கைத் துணைவி. ஆனால் எனது வாழ்க்கையில் மணியம்மை என்றுமே என் மகள்தான்"

இதனைப் பிற்காலத்தில் நன்குணர்ந்த அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்த போது " It Would have been Better, I had been With Periyar" எனத் தனது நண்பர்கள் சிலருக்கு எழுதியுள்ளார்.

காலங்கடந்தும் தவறையுணர்ந்து, மெய்ப்பண்பைப் பெறுகின்ற பெரும் தலைவராகப் பேரறிஞர் அண்ணா விளங்கினார். ▲

## முள்ளியில் இருந்து வயோதிபமாது மீட்பு

யாழ்ப்பாணம்.செப்.15

அரியாலை முள்ளிப்பகுதியில் இருந்து கடந்த சில நாள்களுக்கு முன்னர் படையினரால் மீட்டு வரப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் கடந்த திங்களன்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஷெல் தாக்குதல் சம்பவத்தின் போது, ஷெல் சிதறலினால் கையில் ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சை பெறவே இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கௌரியேற்பிள்ளை நல்லம்மா (வயது73) என்ற வயோதிபப் பெண்ணே காயமடைந்த நிலையில் படையினரால் மீட்கப்பட்டவராவார்.

## இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்.செப்.15

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்ட, வன்செயல், யுத்த அனர்த்தங்களால் பெற்றோரை இழந்த ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புவரை கல்விகற்ற 25 மாணவ மாணவிகள் இந்தப் பயிற்சியில் இணைக்கப்படவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பப் படிவங்களை நல்லூர் லயன்ஸ் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## கலைவிழா

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் அபிவிருத்திக்காக பழைய மாணவர் சங்கத்தினரால் நடத்தப்படும் கலை விழாவும், அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெற உள்ளன.

அதிபர்க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் கே.ஆனந்தராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

கலை நிகழ்ச்சிகளில் வித்தியாசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும் இசை நிகழ்ச்சிகளும், இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபையினரின் நாடகமும் இடம்பெறும்.

## தாச்சிப் போட்டி

வடமாகாண தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் விளையாட்டுக்கழக மைதானத்தில், கொக்குவில் வாசிகசாலை விளையாட்டுக்கழகமும் உடுவில் ஞானப்பிரகாசர் விளையாட்டுக்கழகமும் விளையாடவுள்ளன. (ஐ-86)

## கல்வி ஊக்குவிப்பு போட்டிகள்

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை முன்பள்ளி மாணவர்களுக்கிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளின் இம் மாதத்திற்கான போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெற உள்ளன.

காலை 9மணி தொடக்கம் நடைபெறும் இந்தப் போட்டிகளில் காரைநகர் பகுதியில் உள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்வர்.

இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு முன்னாள் தபால் அதிபர் அமரர் கந்தையா துரையப்பாவின் ஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக நல்லியக்கச் சபைச் செயலர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார். (க-73)

# ஆடும் மயில் மீது காட்சி தரும் முருகனை பாடும் பணியே பணியாய்க் கொள்வோம்!

முருகன் தான் சிவன்; சிவன் தான் முருகன். ஆதலினால் முழு முதற் கடவுளாக விளங்குகின்ற முருகப் பெருமானைப் பாடிப் பணிந்து வணங்குவது சைவத் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

முருகப் பெருமானைச் சிவகுமாரன் என்பது மரபு. சிவனுடைய நெற்றிக் கண்ணில் தோன்றிய ஆறு பொறிகள் சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகள் ஆகி, கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு, பின் உமையம்மை அணைக்க ஒருருவாயினான் என்பது கந்தபுராணம்.

## சிவனே முருகன்

புராணச் செய்தி இதுவாக, தத்துவம் என்ன சொல்கிறது? "அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற சோதி" மேலோங்கி நின்றது சிவபரம்பொருள். அதுவே ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்டு முருகனாய் வந்துதித்தது என்கிறார் கச்சியப்பர்.

### ஞானக்கதிர்

சிவபிரான் திருவாக்கால்,
*"ஆதலின் நமது சக்தி*
*அறுமுகன் அவனும் யானும்*
*பேதகம் அன்றால் நம்போல்*
*பிரிவிலன் யாண்டும் நின்றான்*
*ஏதமில் குழவி போல்வான்.*
*யாவையும் உணர்ந்தான் சீரும்*
*போதமும் அறிவில் வீடும்*
*போற்றினர்க் கருள வல்லான்"*

எனக் கூறப்படுவதை நாம் நோக்கலாம்.

இங்கே சிவனும் முருகனும் ஒன்றேயென நிறுவப்படுகிறது.

அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலையிலும் நிற்பதும், ஆதியும் அந்தமும் அற்று நிற்பதும், ஒன்றாய்ப் பலவாய் நிற்பதும், சக்தியைப் பிரியாதிருப்பதும், முற்றறிவுடையவராய் இருப்பதும், தன்னை வழிபடுவோருக்கு ஞானமும் வீடும் அருளுவதும் சிவன் செயல்கள். இவையே முருகன் அருட் செயல்களாகவும் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

### சிவன் வேறு; முருகன் வேறு அல்ல!

## ஆணவத்தை அடக்கியவன் முருகன்

முருகனுக்கு வாகனம் மயில், தோகையை விரித்த மயில் ஓங்கார வடிவைக் காட்டும். சூரபன்மனைச் சங்கரித்து தனது வாகனமாக ஆக்கிக் கொண்டார் முருகன். இது ஆணவத்தை அடக்கி ஆள்பவன் நானே என்பதை உணர்த்தி, அருள்பவனும் நானே என்பதையும் சுட்டி நிற்கின்றது. பகைவனுக்கும் அருள்பவனாகிய முருகப் பெருமானின் அருட் கருணை இங்கே வெளிக்காட்டப்படுகின்றது.

சேவலைத் தனது கொடியில் மாத்தி 'சேவற்கொடியோன்' எனத் திருநாமத்தையும் கொண்டு விளங்குகின்றார் கந்தவேள்.

"ஆனிதனி மந்தர ரூபநிலை கொண்டு ஆடுமயில் என்று தெரியேனே" என்று திருப்புகழிலும் "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு தூங்கார்...." என்று அலங்காரத்திலும் அருணகிரியார் இவ்வுட் பொருளை விளக்குவார்.

## சேவற் கொடியோன்

முருகனுக்குக் கொடி சேவல். அது 'கொக்கரக்கோ' (மாமரமாகிய சூரனை வீழ்த்திய அரசே) கொக்கு அறுகோ என்று கூவுகிறது. சேவல் (காலை) ஒளியைக்கண்டு கூவும். மயில் மழையிருளைக்கண்டு ஆடும். முருகன் ஒளிக்கும் இருளுக்கும் நடுவே இருக்கிறான். மயிலின் நடனம் கண்ணால் காணக் கூடியது - உருவம், சேவலின் கூவல் காண முடியாதது - அருவம் உருவம் உளது; அருவம் இலது. முருகன் உருவுக்கும் அருவுக்கும் நடுவே இருக்கிறான்.

*"உருவன் றருவன் றுளதன் றிலதன்*
*றிருளன் றொளியன் றெனநின்*
*றதுவே*
*முருகன்...."*

என்று அநுபூதி முழங்கும்.

## முருக தத்துவம்

முருகப் பெருமான் சூராதி அவுணரைச் சங்கரித்தான் என்கிறோம். சூரன், சிங்கன், தாரகன் மூவரும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் வடிவங்கள். போரில் முதலில் தாரகனும், பின்னர் சிங்கனும் மாய, சுற்றில் சூரபத்மனே பொருதுகிறான். அவன் சாவதில்லை. சேவலும் மயிலும் ஆகி முருகனுக்குத் தொண்டு புரிகிறான்.

**சோ.பத்மநாதன்**

இதன் உட்பொருள் என்ன?

சைவசித்தாந்தத்தில் ஆணவம் மூலமலம் எனப்படும். அது அழிவில்லை; தன்வலி குன்றும்; அவ்வளவே. உலகியலிலும் இந்த ஆணவத்தை யாராலும் ஒழிக்க முடிவதில்லை என்பதறிவோம். இவ்வாறு, முருக தத்துவம், ஆராய்வாருக்கு அறிவுச் சுரங்கமாய் விளங்கக் காணலாம்.

# போரை விரும்புவோரின் பிள்ளைகள் ஒருவர் கூட இராணுவத்தில் இல்லை!

## விக்கிரமபாகு கருணாரத்தின கூறுகிறார்

யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்த விரும்பும் கூட்டத்தினரின் ஒரு பிள்ளை கூட படையில் இல்லை. தென் இலங்கையில் உள்ள ஏழை விவசாயிகளின் பிள்ளைகளே படையில் சேர்ந்து தமது உயிரை மாய்க்கின்றனர்.

இவ்வாறு மேல் மாகாணசபை அங்கத்தவரும் புதிய இடதுசாரி முன்னணியின் முதன்மை வேட்பாளருமான விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை ஜிந்துப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற புதிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தை நிறுத்துவதற்காகவும், ஏழை மக்களின் வாழ்க்கை வசதிகளுக்காகவும் தற்போது மேல்மாகாண சபையில், மல்வேறு ஷிகளில் போராடி வருகின்றேன். இந்த நாடு சிங்கள இனவாதிகளுக்கு உரிய நாடு அல்ல; இங்கு வாழும் சகல இனத்தவருக்கும் இந்த நாடு சொந்தமானதாகும். தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்று சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களின் பிரச்சினையை அணுகாவிட்டால் இந்த நாடு மேலும் மேலும் நாசம் அடைவதை யாராலும் தடுக்க முடியாது - என்று தெரிவித்தார். (ஐ-9-6)

# துப்புத்தகவலை அடுத்து தற்கொலைப் படையினரை பிடிக்க விசேட நடவடிக்கை!

கொழும்பு,செப்.15

விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த 23 பேர் ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் விசேட தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

விசேட புலன் விசாரணை அணி ஒன்று இத்தேடுதலை நடத்தி வருவதாக மத்திய மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சில விரிவுரையாளர்கள், ஒரு டாக்டர் ஆகியோர் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்தத் தற்கொலையாளிகளின் ஊடுருவல் பற்றிய தகவல் அவர்கள் மூலம் தெரியவந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'டெய்லி மிரர்' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-20)

# அதிகாரப் பரவலாக்கலை சிஹல உறுமய எதிர்க்கும்

## செய்தியாளர் மாநாட்டில் அதன் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.15

எத்தகைய அதிகார பரவலாக்கல் நடவடிக்கைகளுக்கும் தமது கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று சிஹல உறுமயவின் பொதுச் செயலர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய் காலை கொழும்பில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும், மாகாண சபைகள் முறையையும் எதிர்ப்பது எமது கட்சியின் நோக்கம். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 120ஆகக் குறைக்கப்படும். அமைச்சரவையில் 18 அமைச்சர்கள் மாத்திரம் அங்கம் வகிப்பர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைக் குறைப்பதன் மூலம் அரசாங்கம் பெருமளவு பணத்தைச் சேமிக்க முடியும்.

அரசாங்கத்தின் பூரண சக்திகளை உபயோகித்துப் பயங்கரவாதத்தை ஒழிப்பதே எமது கட்சியின் நோக்கம். மூன்று வருட காலத்தில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும். சிறிய ஆயுதங்கள் உள்ளூரிலேயே உற்பத்தி செய்யமுடியும். ஆயுதங்களைக் காட்டிப் பணம் பறிப்பவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுமிடத்து மரணதண்டனை விதிக்கப்படும்.

நாட்டின் பொருளாதார, சமூக, கல்வித்துறைகளையும் ஏனைய முக்கிய துறைகளையும் கருத்திற்கொண்டுள்ள எமது கட்சி சகல சமூகங்களுக்கும் அவற்றின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னிற்கும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# இந்த நாட்டு அரசியலில் சிறந்த நடிகர் ரணில்!.

## அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு,செப்.15

இலங்கை வரலாற்றில் தோன்றிய இனவாதிகளில் ரணில் விக்கிரமசிங்க பெரும் இனவாதி. இந்த நாட்டின் அரசியலில் அவர் ஒரு பெரும் நடிகர் மேற்கண்டவாறு துறைமுகங்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் கூறினார்.

தமிழ் இளைஞர்களுக்கு துறைமுகத்தில் வேலை வாய்ப்புக்களை வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


ஒலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில், திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் அஷ்ரப் கூறியதாவது:-

1994 ஆம் ஆண்டு சந்திரிகா - அஷ்ரப் ஒப்பந்தம் எழுதப் பட்ட பின்பு திகாமடுல்ல மாவட்டத்தில் நாங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டோம். அப்போதிருந்த நிலைமையைவிட இப்போதைய நிலைமை வித்தியாசமானது இப்போது கதிரைச்சின்னத்தில் போட்டியிடுகின்றோம். அப்போது முஸ்லிம் வேட்பாளர்கள் எல்லோரும் மரச்சின்னத்திலும் தமிழ், சிங்கள வேட்பாளர்கள் கதிரைச் சின்னத்திலும் போட்டியிட்டனர். இன்று இந்த நிலைமை மாறி அம்பாறை மாவட்ட தமிழ், சிங்கள, முஸ் லிம் எல்லோரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்துள்ளனர். திகாமடுல்ல மாவட்ட தமிழ் மக்களுக்கு இன்று வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு நாள் ஆகும். இன்றிலிருந்து அவர்களின் வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் இந்த நாட்டின் தமிழர்கள் 2 ஆம் தரப் பிரஜைகள் என்று ஒதுக்கப்பட்டு அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன.

கிழக்கு மண்ணில் வாழ்கின்ற தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் ஆரம்ப வரலாற்றை எடுத்துப்பார்த்தால் ஒருவருக்கொருவர் ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருக்கிறது. இதை எவராலும் மறுக்கமுடியாது. ஒக்ரோபர் 10 ஆம் திகதி திகாமடுல்ல மாவட்ட தமிழ் மக்களின் ஒரு பொன்னான நாளாகும்.

இந்த நாளில் கதிரைச் சின்னத்திற்கு வாக்களித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் பங்காளிகளா மாற வேண்டும். வெறும் பார்வையாளர்களாக இருக்கவேண்டாம். பொது மக்கள் ஐக்கிய முன்னணி இந்த மாவட்டத்தில் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறும் என்பதில் ஐயமில்லை என்றார். (இ-6)



அஷ்ரப்

# யாழ். மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பதற்கு வசதி செய்யப்படும்

## தேர்தல் ஆணையாளர் தகவல்

கொழும்பு,செப்.15

"யாழ்.மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்துள்ள பொது மக்கள் வாக்களிக்க அவர்களுக்கு விசேட வசதி செய்து கொடுக்கப்படும் ஆனால் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வாழ்பவர்களுக்கு வாக்களிக்க வசதி செய்து கொடுக்க முடியாது." மேற்கண்டவாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை தேர்தல் ஆணையாளருக்கும், தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலின் போதே அவர் இப்படிக் கூறினார்.

இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் தங்கியுள்ள மக்கள் வாக்களிப்பதற்கு விசேட வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று தமிழ்க்கட்சிகளின் பிரதி நிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இது விடயமாகப் பதில் அளித்த தேர்தல் ஆணையாளர் "வடக்கு கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அந்த விண்ணப்பத்திகதி முடிவடைந்து விட்டது. இனி எவரும் விண்ணப்பிக்க முடியாது.

"அதே சமயம் யாழ்.மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்தவர்களுக்கு வாக்களிக்க விசேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இனியும் எவரும் இடம்பெயர நேரிட்டால் அவர்களும் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்படும்" என்றார். (இ-3)

# பெருமாளுக்கு அதிஉயர் அரச பாதுகாப்பு ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் ஜயலத்

ஒருதலைப் பட்சமாகச் சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் அடைந்திருந்த வரதராஜப்பெருமாளுக்கு, பொ.ம.ஐ.முன்னணியின் தேசியப்பட்டியலில் இடமளிக்கப்பட்டு அவர் அரச பங்களாவில் அதி உயர் அரச பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டு வருவது ஏன்?

இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளார் ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன.

தான் மேற்கொண்ட ஈழப் பிரகடனத்தை பெருமாள் இன்னமும் வாபஸ் பெறவில்லை. ஆனால் அரசு ஓர் அமைச்சருக்கு வழங்கப்படுவதை விட அதிக சலுகைகளை அவருக்கு வழங்கியிருப்பதன் மர்மம் என்ன? என்றும் ஜயலத் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராஜகிரியவில் ரவிகருணாநயக்காவின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே ஜயலத் இதனைத் தெரிவித்தார்.(ஐ-20)

### தேர்தல் களம்

### படையினரையும் கடமையில்ஈடுபடுத்தக் கோரிக்கை

கொழும்பு,செப்.15

குழப்பங்கள், வன்முறைகள் நிகழலாம் என எதிர்பார்க்கப்படும் வாக்களிப்பு நிலையங்களில் இராணுவத்தினரையும் கடமையில் ஈடுபடுத்த வேண்டும்.

இவ்வாறு சில அரசியல்கட்சிப் பிரதிநிதிகள் தேர்தல் ஆணையாளரிடம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தலைமையில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அச்சுறுத்தலுக்கு உள்ளாகக் கூடிய வாக்களிப்பு நிலையங்களுக்கு, விசேட பொலீஸ் பிரிவின் பாதுகாப்பு ஏற்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார். (ஐ-20)

# தமிழரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கே புளொட் குழு ஆதரவு

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.15

தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கு புளொட் அமைப்பு ஆதரவு வழங்கும் என்று புளொட் - ஈரோஸ் கூட்டணி சார்பாக வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

யுத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதென்பது இனிமேலும் முடியாத காரியம் என்கின்ற அளவுக்கு எமது மக்கள் களைப்படைந்து விட்டனர். இந்த வேளையில் ஜனநாயக நடைமுறைகள் என்னும் பெயரில் எம் மக்கள் மீது திணிக்கப்படுகின்ற அனைத்து அரசியல் நிகழ்வுகளிலும், தேர்தல்களிலும் மக்கள் நலன் கருதி பங்கு கொண்டுவரும் நாங்கள் மீண்டும் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

அடக்கப்படுகின்ற இனம் தம்மீது திணிக்கப்படுகின்ற அனைத்து அடக்குமுறைகளையும் எதிர்க்கக் கூடிய ஆத்ம பலத்தை, ஒற்றுமை மூலமே பெற்றுக் கொள்கிறது. ஆனால் முரண்பாடான நிலையே எமது இனத்திற்கு வரலாறாகிவிட்டது. விட்டுக்கொடுக்காத நிலைப்பாடுகளாலும் கட்சி நலன்களை முன்னிலைப்படுத்தும் முயற்சிகளாலும் கடந்த பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைத் தொலைத்தோம்.

இந்தமுறை திருகோணமலை மாவட்டத்திலும் அந்தக் கைங்கரியத்தை செய்யத் துணிகிறார்கள். இதன் காரணமாக நாம் இவ்விரு மாவட்டங்களிலும் போட்டியிடுவதை தவிர்க்க முடிவெடுத்தோம். தவிர நாம் இறுதி வரை மேற்கொண்ட ஒற்றுமை முயற்சிகள் தோல்வி அடைந்ததால் எமது கட்சியும் ஈரோஸ் அமைப்பும் மாத்திரம் இணைந்து தேர்தலுக்கு முகம் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சந்திரிகா அரசு இறுதியாக முன்வைத்திருந்த அரசமைப்பு சீர்திருத்த சட்ட நகலே எதிர்வரும் தேர்தலில் பிரசாரங்களுக்கும், முடிவுகளுக்கும் களமாக அமையும் என்பதே உண்மையாகும். முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை நாம் கண்மூடித்தனமாக ஆதரிக்கவுமில்லை, அதே நேரத்தில் கண்மூடித்தனமாக எதிர்க்கவுமில்லை. அவ்வாறு செய்வதன் மூலம் சிங்கள பேரினவாதத்தை, திருப்திப்படுத்தி அல்லது அதன் எண்ணங்களுக்குத் தீனி போட்டு எமது தாயகத்தின் எதிர் காலத்தை குட்டிச்சுவராக்க நாம் தயாரில்லை.

எத்தகைய தீர்வு முயற்சியையும் எதிர்த்துப் புறக்கப்பட்டு விட்ட எமது இனத்தின் வரலாறு, கண்மூடித்தனமாக எதிர்ப்பவர்களுக்கு ஒருவித நியாயத்தையும் தெம்பையும் கொடுக்கிறது. புலிகளின் விடாப்பிடியான நிலைப்பாடும் அதற்குக் காரணமாகி விடுகிறது.

இராணுவத் தீர்வு என்பது இரு தரப்பிலும் சாத்தியமில்லை. புலிகள் கொண்டிருக்கின்ற பலமும் அவர்களது இராணுவ நடவடிக்கைகளுமே சிங்களப் பேரினவாதத்தை பேச்சுக்கள் என்ற நிலைக்கு இழுத்து வருகின்றது என்ற போதிலும் புலிகளின் தலைவர் தனித் தாயகக் கோட்பாட்டில் கொண்டிருக்கும் உறுதியான நிலைப்பாடு காரணமாக அரசியல்த் தீர்வைக் காணும் நடவடிக்கைகள் எதுவும் புலிகளால் உருப்படியாக முன்னெடுக்கப்படுவதில்லை என்பதே எமது கருத்தாகும்.

புலிகளின் இராணுவச் சமநிலை ஆட்டம் காணுமானால் அடுத்தது என்ன என்பதைப்பற்றி சிந்திப்பவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இந் நிலையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நாம் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு சமாந்தரமான அரசியல் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமான தேவையும், சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. தெற்கில் மீண்டும் தூண்டப்பட்டு வரும் சிங்கள பௌத்த பேரினவாதமும், ஐக்கிய இலங்கைக் குள்ளேயே அரசியல்த் தீர்வைக்காண வேண்டும் என்ற அடிப்படையில் மாறிவரும் அக, புற நிலைப் பாடுகளுமே இதன் அடிப்படைக்காரணங்களாகும்.

கடந்த நாடாளுமன்றத்தில் நாம் பிரதிநிதித்துவப்படுத்திய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மாத்திரமே எம்மால் பெற்றுக் கொள்ள முடிந்த நிதி வளங்களில் சிறிய தொகை கூட திறைசேரிக்கு திருப்பிச் செல்லாதவாறு அனைத்தும் மக்களின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளுக்காக நூறு சதவீதம் பயன்படுத்தப்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா, மன்னார் பிரதேசங்களில் மட்டுமன்றி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்திலும் கூட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1994 ஆம் ஆண்டுக்குப் பின்புதான் முதல் முதலாக புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் அபிவிருத்திக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற் குக் காரணம் அநாவசியமான அரசியல் தலையீடுகளை தவிர்த்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்ட அரச நிர்வாகப் பிரிவினருக்கு முறையான நெறிப்படுத்தலை வழங்கிய எமது அரசியல் தலைமைத்துவத்தின் தெளிவான நோக்கமே ஆகும்.

தெளிவான அரசியல் நிலைப்பாடு, ஒற்றுமை குறித்த உறுதியான கொள்கை, தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய அரசியல் தீர்வை நோக்கிய உறுதியான நடவடிக்கைகள், அபிவிருத்திப் பணிகளில் கண்ணியமான நெறிப்படுத்தல் என்பனவே ஓர் எளிமையான, உறுதியான, நேர்மையான, பண்புமிக்க, அரசியல் தலைமைத்துவத்துக்கு அடிப்படையாக அமைய முடியும். அவ்வாறானதோர் அரசியல் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டியவர்கள் நீங்களே என்றுள்ளது. (இ-173)

### லாண்ட்றோவர் சேதம்

கொழும்பு,செப்.15

கேகாலை மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் சம்பிகா பிரேமதாஸவின் லாண்ட்றோவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் கடந்த செவ்வாயன்று றம்புக்கனை என்னும் இடத்தில் வைத்து தாக்கிச் சேதப்படுத்தப்பட்டிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது. (ஐ-20)

### ரணில் கோரிக்கை

கொழும்பு,செப்.15

அரசியல் சேதமற்ற விதத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த தேர்தல் மோசடிகளைத் தவிர்ப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தேர்தல் மோசடிகளைத் தவிர்ப்பது தேர்தல் ஆணையாளருக்கு மட்டும் உள்ள கடமையல்ல; அனைவருக்கும் உள்ள பொறுப்பாகும் என்று கட்டுகம் பொல, பிங்கிரிய தேர்தல் தொகுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அவர் தவறாகப் பயன்படுத்தினால் அரசமைப்பின் 93ஆவது பிரிவுக்கு அமைய விசாரிக்க முடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார். (ஐ-ரி)

## (பெருமாள் விவகாரம் குறித்து)

# தொலைக்காட்சியில் விவாதத்துக்கு ஜனாதிபதியை அழைக்கிறார் ரணில்!

கொழும்பு,செப்.15

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் உள்ளடக்கி இருப்பது தேசியப் பட்டியல் தொடர்பான தங்கள் உறுதியான ஈடுபாட்டைக் கேலிக்குரியதாக்கி உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தொலைக்காட்சியில் பகிரங்க விவாதம் நடத்த முன்வருமாறு சவால் விடுக்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த புதனன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிய ஒரு கடிதத்திலேயே ரணில் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எனது வழியில் முயற்சியை மேற்கொள்வதற்கானவேளை வருகிறது. நாம் பேச்சு வார்த்தை என்ற கட்டத்தில் பிரவேசிக்கும் பொழுது எமது தேசிய நலன்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் ஆயுதப் படைகளைப் பலமானதாகக் கட்டியெழுப்புவோம். பொழுது போக்கு உபாயம் வகுப்போரால் அல்லாமல் ஜெனரல்கள் தலைமையில் படையினர் வழி நடத்தப்படுவார்கள் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

# நான்கு மாதக் குழந்தையை விசர் நாய் கடித்துக் குதறியது!

## காரைநகரில் சம்பவம்

காரைநகர்,செப்.15

அதிகாலைவேளை வீட்டினுள் புகுந்த விசர் நாய் ஒன்று அங்கு நித்திரையில் ஆழ்ந்திருந்த நான்கு மாதக் குழந்தை ஒன்றைக் கடித்துக் குதறி உள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 5மணியளவில் காரைநகர் வேரப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

நாய்க்கடிக்கு இலக்கான நான்கு மாதக் குழந்தையான அதே இடத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் நிரோஜனுக்கு காரைநகர் அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவ தினம் அதே இடத்தைச் சேர்ந்த மேலும் மூவரை கடித்த அந்த நாய் ஆறு ஆடுகளையும் கடித்துக் குதறி உள்ளது.

இந்த நாயின் கடிக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த கணேசன் மல்லிகாதேவி (வயது 40),கந்தனசெல்லத்துரை (வயது60) எஸ்.மதிவதனி (வயது 12) ஆகியோர் காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு அந்த நாயை அடித்துக் கொன்றுள்ளனர். எனினும் காரைநகர் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி போடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால் மேலும் பல நாய்கள் விசர்நோய்க்கு இலக்காகும் ஆபத்து உள்ளதாக மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

(ஐ-73)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 14 ஆம் திகதிவரை) பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/142701/A | 512/142701/B |
| 512/142701/C | 512/142701/D |
| 512/144419/A | 512/144419/B |
| 512/144419/C | 512/144683/A |
| 512/148044/A | 512/148044/B |
| 512/149828/A | 512/149829/A |
| 512/150281/A | 512/150281/B |
| 512/150281/C | 512/151313/B |
| 512/151313/C | 512/151313/D |
| 512/151313/E | 512/152313/A |
| 512/152376/A | 512/152385/A |
| 512/152454/A | 512/152888/A |
| 512/152888/B | 512/152888/C |
| 512/154001/A | 512/154001/B |
| 512/154001/C | 512/154001/D |
| 512/154001/E | 512/154168/A |
| 512/154168/B | 512/154196/A |
| 512/154275/A | 512/154275/B |
| 512/154275/C | 512/154275/D |
| 512/154275/E | 512/156221/A |
| 512/156221/B | 512/156221/C |
| 512/156221/D | 512/156260/A |
| 512/156383/A | 512/156383/B |
| 512/156389/A | 512/156389/B |
| 512/156418/A | 512/156418/B |
| 512/156436/A | 512/156436/B |
| 512/156436/C | 512/156492/A |
| 512/156492/B | 512/156502/A |
| 512/156506/A | 512/156542/A |
| 512/156542/B | 512/156599/A |
| 512/156599/B | 512/156599/C |
| 512/156599/D | 512/156599/E |
| 512/156599/F | 512/156615/A |
| 512/156680/A | 512/156680/B |
| 512/156995/A | 512/156995/B |
| 512/156995/C | 512/159054/A |
| 512/159054/B | 512/159116/A |
| 512/159133/A | 512/159133/B |
| 512/159133/C | 512/159137/A |
| 512/159178/A | 512/159179/A |
| 512/159179/B | 512/159222/A |
| 512/159222/B | 512/159222/C |
| 512/159222/D | 512/159223/A |
| 512/159224/A | 512/159224/B |
| 512/159224/C | 512/159224/D |
| 512/159237/A | 512/159249/A |
| 512/159270/A | 512/159270/B |
| 512/159270/C | 512/159299/A |
| 512/159323/A | 512/159332/B |
| 512/159334/C | 512/159354/A |
| 512/159354/B | 512/159354/C |
| 512/159354/D | 512/159354/E |
| 512/159365/A | 512/159380/A |
| 512/159422/A | 512/159436/A |
| 512/159436/B | 512/159437/A |
| 512/159437/B | 512/161165/A |

### கோப்பாய்

| | |
|---|---|
| 512/148008/A | 512/148008/B |
| 512/148008/C | 512/148008/D |
| 512/156528/A | 512/156528/B |
| 512/159164/A | |

### நல்லூர்

| | |
|---|---|
| 512/140647/A | 512/140647/B |
| 512/140647/C | 512/140647/D |
| 512/140647/E | 512/140647/F |
| 512/140647/G | 512/143075/A |
| 512/143075/B | 512/143075/C |
| 512/143075/D | 512/144295/A |
| 512/144295/B | 512/144295/C |
| 512/148195/A | 512/148195/B |
| 512/154132/A | 512/154138/A |
| 512/154220/A | 512/154229/A |
| 512/154229/B | 512/154229/C |
| 512/154229/D | 512/154240/A |
| 512/154429/A | 512/154429/B |
| 512/156224/A | 512/156315/A |
| 512/156315/B | 512/156324/A |
| 512/156468/A | 512/156468/B |
| 512/156468/C | 512/156468/D |
| 512/156468/E | 512/156475/A |
| 512/156475/B | 512/156583/A |
| 512/156583/B | 512/156583/C |
| 512/156583/D | 512/159166/A |
| 512/160996/A | 512/160996/B |
| 512/160996/C | 512/126774/A |
| 512/144609/A | 512/144609/B |
| 512/144609/C | 512/144609/D |
| 512/144609/E | 512/144609/F |
| 512/152374/A | 512/156262/A |
| 512/156262/B | 512/156262/C |
| 512/156409/A | 512/156409/B |
| 512/156409/C | 512/156409/D |
| 512/156409/E | 512/156409/F |
| 512/156521/A | 512/156521/B |
| 512/156521/C | 512/156581/A |
| 512/156581/B | 512/156581/C |
| 512/159004/A | 512/159004/B |
| 512/159032/A | 512/159032/B |
| 512/159034/A | 512/159034/B |
| 512/159037/A | 512/159037/B |
| 512/159037/C | 512/159037/D |
| 512/159043/A | 512/159043/B |
| 512/159139/A | 512/159139/B |
| 512/159140/A | 512/159140/B |
| 512/159140/C | 512/159161/A |
| 512/159161/B | 512/159161/C |
| 512/159180/A | 512/159180/B |
| 512/159180/C | 512/159180/D |
| 512/159242/A | 512/159248/A |
| 512/159248/B | 512/159334/A |
| 512/159334/B | 512/159441/A |
| 512/159441/B | 512/159441/C |
| 512/160956/A | 512/161049/A |
| 512/161049/B | 512/161049/C |
| 512/161049/D | 512/161360/A |
| 512/161360/B | |

## இடம்பெயர்ந்தவருக்கு வீடுகள்

அண்மையில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து தங்கி இருக்கும் குடும்பங்களுக்கு தொண்டமனாறுப் பகுதியில் 21 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வீடமைப்புக்கான உதவிகளை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது. (க-30)

## குமுதினி இருதடவை சேவை

அரச மோட்டார் படகான 'குமுதினி' எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தினசரி இருதடவைகள் நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடவுள்ளது.

நயினாதீவில் நிறுத்தப்படும் இப்படகு காலை 6 மணிக்கு அங்கிருந்து நெடுந்தீவுக்குச் சென்று, நெடுந்தீவில் இருந்து காலை 7 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும்-

குறிகாட்டுவானில் இருந்து காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்குமான வழமையான சேவையில் ஈடுபட்டபின் அங்கிருந்து நங்கூரமிடுவதற்காக மீண்டும் நயினாதீவுக்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)

## வீதி திருத்தம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை-துணைவி வீதித்திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவ்வீதி பல வருடங்களாக குண்டும் குழியுமாகத் திருத்தப்படாது இருந்தது குறிப்பிடத்தக்கது. (30)


## வாழ்த்துகின்றோம்

இன்று பவளவிழாக் காணும்
அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்
கந்தசுவாமி கோயில்
பிரதமகுரு
**உயர் திரு. சீனியன் சிவகுரு அவர்களை**
**உளமார வாழ்த்துகின்றோம்.**

திரு. கு. ரவிச்சந்திரன்
குடும்பத்தினர்
அச்சுவேலி.

(783 )

## ஸ்கந்தாவின் வாழ்த்து

அகில இலங்கை ரீதியில் சிறுகதைப் போட்டிகளில்
பரிசு பெற்ற எமது கல்லூரி மாணவி



**செல்வி ஆரபி சிவஞானராஜா**

அவர்களின் 'கரைதேடும் அலைகள்" என்ற *சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா* இன்று (15-09-2000) வெள்ளிக் கிழமை நடைபெறுவதை முன்னிட்டு எமது இனிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (78369)

கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
பழைய மாணவர் சங்கம் நடத்தும்

## கலைவிழாவும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பும்

இடம்: வித்தியாசாலை அரங்கு
காலம்: நாளை (16-09-2000) சனிக்கிழமை
பிற்பகல் 3.30 மணி (இலங்கை நேரம்)
பிரதம விருந்தினர்: திரு. கே. ஆனந்தராசா
*(முகாமையாளர், மக்கள் வங்கி சுன்னாகம்.)*

நுழைவுச்சீட்டுக்கள் பிற்பகல் 4.00 மணி வரை மட்டும் விற்பனையாகும்.

அனைவரையும் ஆதரவு வழங்குமாறு
அன்புடன்அழைக்கின்றோம்.

*பழைய மாணவர் சங்கம்*

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (12931)

மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.

## மீண்டும் ஓர் அலங்காரத் திறப்புவிழா

காலம்: இன்று (15-09-2000) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி

※ ஆண்கள் விடுதி புனரமைப்பு – 'போரூட்" நிறுவன நிதி
※ ஊழியர் உந்து சுருளி (Bicycle) தரிப்பிடம்
※ மகளிர் மலசலகுளியல் கூடம்
※ மகளிர் போசன கூடம்
} வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் நிதி

பிரதான விருந்தினர்

| | |
|---|---|
| போரூட் திட்ட முகாமையாளர் | போரூட் நிகழ்ச்சி அதிகாரி |
| ஆன் ஆங்கிள்வீற் | என். கோகுலதாஸ் |
| ANNE ANGLTVEIT | N.KOHULADAS |
| PROJECT MANAGER, FORUT. | PROGRAMME OFFICER, FORUT. |

**சிறப்பு விருந்தினர்கள்** திரு. M.K. சிவாஜிலிங்கம் *(வல்வை நகரபிதா)*

**கௌரவ விருந்தினர்கள்:**

டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம் *(சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.)*
திரு. ஆ. சிவசுவாமி *(பிரதேச செயலர், பருத்தித்துறை.)*
திரு. நா. மகேந்திரன் *(உதவித் திட்டமிடற் பணிப்பாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை.)*
திரு. எஸ். மகேந்திரன் *(நிர்வாக உத்தியோகத்தர், சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.)*
திரு. பீ. கனகசபாபதி *(செயலாளர், வல்வெட்டித்துறை, நகராட்சிமன்றம்.)*

*இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*வைத்தியசாலை ஊழியர்கள்,*
*வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை,*
*அபிவிருத்திச்சபையினர்.*

(78294)

## வலிகாமம் வலயத்தில்
# கணித-விஞ்ஞான பாடங்களின் மேம்பாட்டுக்காக செயற்றிட்டம்

வலிகாமம் தெற்கு, செப். 15

வலிகாமம் கல்வி வலயத்தில் கணித-விஞ்ஞான பாடங்களின் அடைவு மேம்பாட்டுக்காக விசேட செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 43 பாடசாலைகளுக்கான இத்திட்டம் 20 நிலையங்களில் நடத்தப்படுகின்றது.

உடுவில் கல்விக் கோட்டத்திலுள்ள ஆறு நிலையங்களில் 11 பாடசாலைகளும் —

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள ஆறு நிலையங்களில் 14 பாடசாலைகளும் —

சங்கானைக் கல்விக் கோட்டத்திலுள்ள ஐந்து நிலையங்களில் 9 பாடசாலைகளும் —

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திலுள்ள மூன்று நிலையங்களில் 9 பாடசாலைகளும் —

இச்செயற்றிட்டத்தில் பங்குபற்றி வருகின்றன.

இச்செயற்றிட்டத்தின் மூலம் சுமார் 600 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள கணித-விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு 12 நாள்களுக்கு (விடுமுறை தினங்களில்) சேவைக்கால பயிற்சி ஆசிரியர்களால் செயலமர்வுகள் நடத்தப்பட்டும் வருகின்றன

இச்செயற்றிட்ட அதிகாரிகளாக எஸ். சுகுமாரன் (கணிதம்) எஸ் விஜயேந்திர சர்மா (விஞ்ஞானம்) பணியாற்றி வருகின்றனர்.

(ஐ-152)

# சந்தேக நபரை தொடர்ந்து விளக்கமறியலில்வைக்கஉத்தரவு

நெல்லியடி, செப். 15

குடும்பஸ்தர் ஒருவர் மர்மமான முறையில் மரணமான சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவரது மனைவியை மேலும் இரு வார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மாதம்31 ஆம் திகதி இரவு துன்னாலை தாமரைக் குளத்தடிப் பகுதியில் இடம்பெற்றஇந்த சம்பவம்தொடர்பாக ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான லோகநாதன் ஜெயந்தி (வயது 36) என்பவரை சிறைச்சாலை அதிகாரிகள் கடந்த வெள்ளியன்று நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அப்பொழுதே இம் மாதம் 22 ஆம் திகதி வரை தொடர்ந்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

(இ-109)

## சிறுவர் பூங்கா

அச்சுவேலி, செப். 15

அச்சுவேலி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் 80 ஆயிரம் ரூபா செலவில் சிறுவர் பூங்காவை வித்தியாலய ஆரம்ப பிரிவில் நிறுவி வருகின்றது.

ஆரம்ப பிரிவு மாணவர்களின் உடல் உள வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு சறுக்கி, றாட்டினம், ஊஞ்சல் ஆகியன உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுச் சாதனங்கள் சிறுவர் பூங்காவில் நிறுவப்பட்டு வருகின்றது.

(இ-11)

## சமய சந்நிதிகளில்

நெல்லியடி, செப். 15

துன்னாலை தெற்கு கொட்டுக்குளக்கரை விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

(க-109)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய மாதா ஆலய யூபிலி ஆண்டின் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனை இடம்பெறும்.

(க-30)

★ ★ ★

வடலியடைப்பு-புதறாளை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான திருதியை தின இலட்சநாமார்ச்சனைப் பெருவிழா இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும்.

இந்தப் பெருவிழாவில் பஞ்சகுண்டபக்ஷ நவோத்தர சகஸ்ர மஹா கும்பாபிஷேகமும் நவோத்தர சத கலச சங்காபிஷேகமும் விஷேட பூஜைகளும் அன்னதானமும் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

(இ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழாவும் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

இந்த விழாவில் சங்காபிஷேகம் விசேட திபாராதனை விநாயகப் பெருமான் திருவீதி வலம்வருதலும் இடம்பெறும்.

(இ-ரி)

# பாடசாலைக்குப் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், செப். 15

நீண்ட காலமாக வகுப்பறைப் பற்றாக்குறை நிலவி வந்த சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு இரண்டரை லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வட்டுக்கோட்டை பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான என் திரிலோகநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலைச் சமூகமும் இப்பகுதி மக்களும் தங்கள் பாடசாலையில் புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு ஈ. பி. டி. பி. அமைப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சியினால் வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையினால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கான புதிய கட்டடத்தை அமைப்பதற்கான 9 பரப்புக் காணியை ஓய்வு பெற்ற பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் அன்பளிப்பு செய்திருந்தார். என். திரிலோகநாதன் விடுத்த வேண்டுகோளையடுத்து இப் பிரமுகர் மேலும் 11 பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-க-3)

## சந்தேகத்தின்பேரில் பத்துப் பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 15

திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைதான சந்தேக நபர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்து மேலும் பத்துப் பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வந்த பல திருட்டுக்கள் தொடர்பாக கடந்த வாரம் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பிடிக்கப்பட்டார்.

அவரது தகவல்களைத் தொடர்ந்தே மேலும் 10பேர் கைது செய்யப்பட்டு பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் குழுவாகத்திக்குத்திக்காக இயங்கி வந்தவர்கள் எனவும்—

இக்குழுவின் முக்கிய புள்ளி தலைமறைவாகியுள்ளார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

சில ஊர்களின் வரைபடங்களும் இவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

(இ-க-15)

## நூல்கள் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 15

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் கலைக்கழகத் தமிழ் இலக்கியக்குழு 1999 ஆம் ஆண்டுக்கான அரசஇலக்கிய விருது பெறும் நூல்களாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரின் நூல்களையும் தெரிவு செய்துள்ளது.

தீவகக்கல்வி வலய நிர்வாக அதிகாரியான செல்லையா மெற்றாஸ்மயில் எழுதிய ''இசை நாடகக் கூத்து மூத்த கலைஞர் வரலாறு'' என்னும் நூலுக்கும்—

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட விரிவுரையாளரான எஸ். மகேந்திரன் எழுதிய 'தமிழர் முளவியல்' என்னும் நூலுக்கும் — விருது கிடைத்துள்ளது.

இவர்களுக்கான விருதுகள் எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் இடம்பெறும் வைபவத்தில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

(இ-3)

## கடை நடத்த முன் அனுமதிபெற கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 15

எதிர்வரும் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள சாட்டி சித்தாத்திரை மாதா ஆலய வருடாந்தத்திருவிழாக்களின்போது கடை நடத்துவதற்கு முன் அனுமதிபெற வேண்டும் என்று வேலணை பிரதேச செயலர் செ.இரத்தினம் அறிவித்துள்ளார்.

கடை உரிமையாளர்கள் தங்களது வதிவிடத்துக்குப் பொறுப்பான படை அதிகாரியின் பரிந்துரையுடன் ஆவணங்களை நேராகாவத்துடன் வேலணை மக்கள் தொடர்புப் படை அதிகாரியிடம் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(இ-3)

# இன்றைய மாணவரின் நேரத்தை தொலைக்காட்சி விழுங்கி வருகிறது

## நூலக வார நிகழ்வில் உரை

இலங்கையில் மாணவர்கள் மத்தியில் நூல்களை வாசிக்கும் பழக்கம் அருகி வருகின்றது. நாங்கள் கல்வி கற்கும் காலங்களில் மாணவர்கள் நீண்டநேரம் நூல்களை வாசித்துவந்தனர். இன்றைய மாணவர்களின் நேரத்தில் பெரும்பகுதியை தொலைக்காட்சி விழுங்கி வருகிறது. மாணவர்கள் முழு நேரத்தையும் தொலைக்காட்சியில் செலவிடாது நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு நல்லூர் பிரதேச செயலரும் எழுத்தாளருமான கலாநிதி க. குணராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரியின் நூலக வார இறுதி நாள் நிகழ்வும் நூல் கண்காட்சியும் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி யா. தனபாலன் தலைமையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கலாநிதி க. குணராசா மேலும் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் மக்கள் ஓரளவுக்கு நூல்களை வாசித்து வருகின்றார்கள். ஆனால் கொழும்பு போன்ற நகர்ப்புற மக்கள் மத்தியில் நூல்களை வாசிக்கும் பழக்கம் மிக அரிதாகிக் கொண்டு வருகின்றது.

### நூல் வாசிப்பு அருகி வருகிறது

அண்மையில் நான் லண்டன் சென்றபோது அங்கு தங்கியிருந்த நண்பனின் வீட்டில் எந்த ஒரு நூலையும் காணவில்லை அங்குள்ளவர்கள் கணனியிலும் இன்ரநெற்றிலும் நூல்களையும், சஞ்சிகைகளையும் வாசிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த அளவுக்கு எங்கள் நாடு வளர்ச்சியடையாத நிலையில் நாம் நூல்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். நூல்களை வாசிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஈழத்து நூல்கள் என்ற தொகுதி கல்வியியற் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவேண்டும். தற்போது பெற்றுக் கொள்ள முடியாத நூல்களை யாழ். பல்கலைக்கழகம் யாழ். மாநகரசபை போன்ற நூலகங்களில் இருந்து போட்டோப் பிரதி செய்து அவற்றை உங்கள் நூலகத்தில் பேணிவைக்கவேண்டும்— என்றார்.

மூத்தஎழுத்தாளர் சொக்கன் அங்கு உரைநிகழ்த்தும்போது; 25 வயதுக்கு உட்பட்டகாலப் பகுதியிலேயே பெரும்பாலானோர் பொதுஉடைமை வாதிகளாக விளங்குகின்றனர். ஆசிரியப் பயிற்சியைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வயதெல்லையே பொருத்தமானதாக அமைகின்றது. 25 வயதுக்கு மேல் படிப்படியாக தனியுடைமை எண்ணங்கள் மேலோங்குகின்றன. நீங்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதால் மிகவும் துடிப்பாட்டத்துடன் இந்த நூல்களைச் சேகரித்துவந்து ஒரு நூலகத்தை உருவாக்கி உள்ளீர்கள்.

உள்ளத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கும், நேர்வழியில் செல்வதற்கும் நூல்கள் உதவுகின்றன. படிக்கும் ஒவ்வொரு நூலும் எழுத்தாளரின் ஆத்ம ஓலமாகவே ஒலிக்கின்றது — என்றார்.

மூத்த எழுத்தாளர் புத்தொளி சிவபாதம் உரை நிகழ்த்தும்போது; எப்போதும் கற்றுக்கொண்டிருப்பதே உண்மையான வாழ்வு, கல்லாதவன் வாழத் தகுதி அற்றவன். மனதில் உள்ள எண்ணங்களை வெளிப்படுத்தும் கண்ணாடி நூல்கள் ஆகும். ''ஆசிரியன் இன்று ஏங்கினால் நாடு நாளை ஏங்கும். ஆசிரியன் இன்று தூங்கினால் நாடு நாளை தூங்கும்'' என அறிஞர் அண்ணா கூறியவற்றை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு ஆசிரியரும் வீட்டிலே புத்தகங்களைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும். குறைந்தது 25 புத்தகங்களையாவது சேகரித்து வைத்திருத்தல் அவசியமாகும் — என்றார்.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் பேசும்போது; ஆசிரியர்கள் தாம் பல வருடங்களுக்கு முன் கற்றவற்றை மாணவர்களுக்கு இன்று கற்பிக்கமுடியாது. ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். என்றைக்கு ஆசிரியன் கற்பதை நிறுத்தி விடுகின்றானோ அன்றே தனது தொழிலை நிறுத்தியவன் ஆகின்றான்.

உலக வங்கியும், மத்திய அரசும் நூலக அபிவிருத்திக்கு நிதியை வழங்கும். அவற்றின் நிதி கிடைக்கும் வரை அவற்றை நாம் எதிர்பார்த்துக் கொண்டிராது இங்குள்ள புரவலர்களிடம் நூல்களை அன்பளிப்பாகப் பெற்று சிறிய அளவிலாவது இந்த நூலகத்தை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன் — என்றார்.

கல்வியியற்கல்லூரி மாணவ முதல்வி எஸ். சிவாசினி நன்றி உரை நிகழ்த்தினார்.

இதேவேளை கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் செய்த ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) செயலாளர் நாயகம் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஒரு தொகுதி நூல்களை பீடாதிபதியிடம் கையளித்தார். (இ-73-152)

## கல்வியியல் கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முதன்முறையாக இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக் கூட்டுறவு ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கூட்டுறவு ஆணையாளர் (பனம்பொருள் அபிவிருத்தி) எஸ். கணேஷமூர்த்தியும் பங்குபற்றுவர்.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் அழியா இடம்பெற்றுள்ள பேராசிரியர் ச. வித்தியானந்தன், பேராசிரியர் அ. துரைராசா, பேராசிரியர் எ. சந்திரசேகரம் ஆகியோரின் பெயர்கள் இல்லங்களுக்கு இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (இ-க-ரி)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கணபோடை, கஊமி காரைநகரைச் சேர்ந்த குலசேகரம் விமலாதேவி என்பவருடைய தேசிய அ.அ., விசேட அ.அ. என்பன தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தேர் உற்சவத்தின் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி ஆலயத்தில் அல்லது க.குருந்தையா அன் சன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78381)

69, சீனிவாசம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சில்வேரியன் மரியரட்ணம் தெலசால் மரியதாஸ் என்பவரது தே.அ.அ. (இல.711364471V), வி.அ.அ. (0907001797) என்பன கடந்த 12.09.2000 அன்று நவாலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜெகன் களஞ்சியம், 285, கே.கே.எஸ். வீதி அல்லது J/83, கிராம அலுவலர் அலுவலகம் (கொட்டடி) என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (78376)

### தேவை

தமிழ், ஆங்கிலம் Type Setting தெரிந்தவர்கள் சனி, ஞாயிறு தினங்களில் நேரில் வரவும். பெண்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 150, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். (78386)

### திருமண சேவை

எங்களிடம எல்லா மதங்களிலும் உள்ளூர், வெளியூர் உத்தியோகங்களில் மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (78385)

### கைமாறி விட்டது

12-09-2000 செவ்வாய்க்கிழமை காலை கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்துக்கு அண்மையில் விடப்பட்ட நீலநிற YAMAHA MOTOR CYCLE 500-2918 50V E.N V50- 7356994 C.N V50- 7356994 கைமாறி எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. தகவல் அறிந்தவர்கள் சி. ஸ்ரீ ரங்கநாதன், கேகேஎஸ் வீதி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரிக்கு அறியத்தரவும். சன்மானம் வழக்கப்படும். T.P 2947 (78370)

### விற்பனைக்கு

தற்போது பாவனையிலுள்ள A.80 Suzuki மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M. விஜயகுமார், இல. 50/6, செட்டித்தெரு, நல்லூர். (78360)

அலுவலக மேசை, சாப்பாட்டு மேசை, கட்டில் போன்ற தளபாடங்களும் வீடியோ டெக் என்பனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பற்றிமா வாசம், சில்லாலை, பண்டத்தரிப்பு. (78388)


அதிக சக்தியைத் தந்து
வயிற்றுப் போக்கை நிறுத்தும்

Brownson Arrowroot POWDER

பிறவுண்சன் அரறூட் மாவு

அரறூட் கஞ்சி குழந்தைகள், வயதானவர்கள் எல்லோருக்கும் போசாக்கு மிக்க உணவு

BROWNSON INDUSTRIES, COLOMBO - 11

யாழ்.நகரில் கிடைக்கும் இடம்:-
ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறிஸ்
இல.161A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2219
(78389)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் செல்லமுத்து கைலாசபதி

(ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

எமது நிலையத்தின் போசகரும், நிலைய விளையாட்டு, நூலக சேவைக் கட்டட அமைப்புப் பணிகளில் ஆலோசகராகவும் இருந்து நிலைய வளர்ச்சிக்கும், கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் அரும்பணியாற்றிய அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்தித்து எமது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

இடைக்காடு கலைமகள்
சனசமூக நிலையம்.

(78379)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 07 — 1936

மறைவு: 15 — 09 — 1997

அமரர்

### ஆறுமுகம் தம்பையா B.Sc.

(இளைப்பாறிய உபஅதிபர், - யா/தேவரையாளி இந்துக்கல்லூரி)

அன்புத் தெய்வமே!

மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பு ஊற்று என்றும் எம்மைவிட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*

(78378)

# இலங்கைக்கு இந்தியா பலவழிகளில் உதவுகிறது

## பகிரங்கப்படுத்த கதிர்காமர் மறுப்பு

இலங்கை இனநெருக்கடி தொடர்பான விவகாரங்களை இந்தியா கையாளும் விதம் குறித்து இலங்கை மிகவும் திருப்தி அடைகின்றது. இந்த விடயம் தொடர்பாக புதுடில்லி இலங்கைக்கு பல வழிகளில் உதவுகிறது. ஆனால் அந்த உதவிகள் எவை என்பதைப் பகிரங்கப்படுத்தும் தனி உரிமை எனக்குக் கிடையாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

ஐ.நா.புத்தாயிரம் ஆண்டு மாநாட்டில் ஜனாதிபதியின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ள வாஷிங்டன் சென்றிருந்த அமைச்சர் கதிர்காமர் அங்கு 'இந்திய அப்ரோட் நியூஸ் சேர்விஸ்' என்ற செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அதிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தற்போதுள்ள உறவு முன்னெப்போதும் இருந்திராத அளவுக்குச் சிறப்பாக இருப்பதாகவும் கதிர்காமர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகள் நடுநிலைமையாகவும் பரஸ்பரம் நம்பிக்கையுடனும் காணப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு தமிழ் நாட்டில் உள்ள சில பிரிவினர் வழங்கி வரும் ஆதரவு குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றல்ல. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபாலசாமி போன்ற சில மாநில அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிவரும் ஆதரவும் அவர்களின் நிலைப்பாடும் தற்காலத்துக்குப் பொருந்தாத, காலம் கடந்ததொன்றாகும்.

கடந்த ஆறு வருடங்களாக இந்தியா தொடர்பான எமது கொள்கை உறுதியானதாக இருக்கிறது. ஒளித்துப் பிடித்து விளையாடும் விளையாட்டு இல்லை; இரகசியம் இல்லை; முட்டாள் தனமான நடவடிக்கை பெ[illegible]றுமில்லை; மிகவும் நடுநிலைமையானதாக இருதரப்பு உறவுகளும் இருக்கின்றன. அமெரிக்காவுடன் உள்ள உறவுகளிலும் பார்க்க இந்தியாவுடன் தற்போது இருக்கும் உறவு உன்னதமானதாக இருக்கின்றதென்பதை என்னால் கூறமுடியும் என்றும் கதிர்காமர் அப்பேட்டியில் விவரித்துள்ளார். (ஐ-4)

### நான்கு புலிகள் உயிரிழப்பு

வவுனியா,செப்.15

வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்த நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெயர்களை 'புலிகளின் குரல்' வானொலி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் வீரவேங்கை கோமகள் (சிங்கராசா பரிமளா - யாழ்ப்பாணம்),விழுப்புண் அடைந்திருந்த போராளி வீரவேங்கை சிவநாதன் (சுப்பையா யோகேஸ்வரன்- வவுனியா) ஆகியோரும்-

அன்றைய தினம் அரியாலைப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராதமோதலில் லெப்.யாழோன் (அருச்சுனன் ஜெயரூபன்- வவுனியா), வீரவேங்கை திருக்கோதை (குமாரன ஸ்ரீவள்ளி - யாழ்ப்பாணம்) ஆகியோருமே உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

### பயிற்சி நெறிக்கு தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.15

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) பயிற்சி நெறிக்கு ஆள்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-3)

### போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.15

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சை நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும்-

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ்.கல்வி வலயத்தின் தற்காலிக அலுவலகத்தில் இன்று பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் தினத்தன்று பரீட்சை நிலையத்திலும் அனுமதி அட்டைகளைப் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கடைகள் பகிரங்க ஏலம்

வடமராட்சி துன்னாலை வடக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு பின்வரும் கடைகள் பகிரங்க ஏலத்தில் 23.09.2000 காலை 10.00 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

கேள்விக்காரர் காலை 9.30 மணிக்கு கருமபீடத்தில் சமுகமளித்துத் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் 30.09.2000 க்கு முன் பணத்தைக் கோயிற் கருமபீடத்தில் செலுத்தி ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(1) ஐஸ் கிறீம் கடை - இல. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9.
(2) மிட்டாஸ் கடை - இல. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.

- தர்மகர்த்தா சபையினர்.

(C/12933)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் செல்லமுத்து கைலாசபதி

(ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தில் நீண்டகாலம் செயலாளராகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கும், கிராமத்தின் முன்னேற்றத்துக்கும் அயராது உழைத்த-

அமரர் கைலாசபதி அவர்கள் 12.09.2000 அன்று கொழும்பில் காலமான செய்தி அறிந்து பெரிதும் துயரடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
இடைக்காடு மகா வித்தியாலயம்.

(78380)

## 6ஆம் மாத நினைவஞ்சலி

(180ஆம் நாள்)



தோற்றம்: 1959 - 04 - 03

மறைவு: 2000 - 03 - 20

அமரர்

### கணபதிப்பிள்ளை ஜெகநாதன்

20.03.2000 அன்று அமரத்துவம் அடைந்த எம் குடும்பத் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை ஜெகநாதன் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று காலை எமது இல்லத்தில் நடைபெறும். கிரியைகளிலும் அதன் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், யாவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

- மனைவி, பிள்ளை.

*36, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி.*

(78392)

# அரசு அனுமதி மறுத்தாலும் புலிகளின் பதில் கிடைத்ததும் வன்னி செல்வோம்

## படையினர் பெற்றோர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

அரசினதும் இராணுவத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் அனுமதி கிடைக்காது போனாலும் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அனுமதி கிடைத்ததும் நாம் சுயமாக வன்னி செல்லத் தீர்மானித்திருக்கின்றோம்.

இவ்வாறு காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் ஈ.பி. நாணயக்காரா கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில்புலிகள்வசமுள்ள எமது பிள்ளைகளைப் பார்க்க விரும்பி அங்கு போவதற்குப் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கேட்டோம். இப்போது யுத்த நிலைமை இருப்பதால் வன்னி செல்ல அனுமதி தரமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. எனவே விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர் தமிழ்ச்செல்வனுக்கு 'ஈமெயில்' மூலம் கடிதம் அனுப்பியிருக்கிறோம். அவரிடமிருந்து சாதகமான பதில் கிடைத்ததும் நாம் வன்னி செல்வோம்.

மோதல்களின் போது காணாமற்போய் இருக்கும் எமது பிள்ளைகளின் பெற்றோர் சுமார் ஆயிரம் பேர் தமது உயிருக்கு ஆபத்து நேர்ந்தாலும் பரவாயில்லை என்று வன்னிசெல்ல முடிவு செய்துள்ளார்கள். இதை எவரும் தடைசெய்ய முடியாது.

எமது அங்கத்தவர்களுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளோம்.

''வன்னிக்கு எமது சொந்த முயற்சி மூலம் சுயமாகவே செல்கிறோம். எமது உயிருக்கு கெடுதல் ஏற்பட்டால் அதற்காக இலங்கை அரசாங்கத்தையோஇராணுவத்தையோ பாதுகாப்பு அமைச்சையோ பொறுப்பாக்கமாட்டோம்'' என்று சகல அங்கத்தவர்களும் சத்தியக்கடதாசி ஒன்றில் கையொப்பமிட்டு எடுத்துவர வேண்டும் என்று கேட்டுள்ளோம். இந்தக் கூட்டத்தில் எமது பயணத்திட்டங்கள் எவ்வாறு இருக்கும் என்ற முடிவான தீர்மானம் எடுக்கப்படும்— என்றார். (க-4)

# ரூபவாஹினி, வானொலியில் தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

கொழும்பு. செப் 15

எதிர்வரும் பொதுத்தேர்தலில்போட்டியிடும்வேட்பாளர்கள் கடந்த திங்கள் முதல் அரசாங்கஇலத்திரனியல்ஊடகங்கள் ஊடாகவும் தமது தேர்தல் பிரசாரங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வேட்பாளர்களின் உரைகள் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி ஆகியவற்றுக்கு ஊடாகவும் ஒலி, ஒளி பரப்பப்படும்.

ஒரு தேர்தல் மாவட்டத்தில் மட்டும் போட்டியிடும் அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு முப்பது நிமிடங்களும் —

இரண்டு முதல் பதின்மூன்று தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு அறுபது நிமிடங்களும் —

பதினான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கும் 132க்கு மேற்பட்ட வேட்பாளர்களைக் கொண்ட அரசியற் கட்சிகளுக்கும் தொண்ணூறு நிமிடங்களும் தேர்தல் பிரசாரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. (இ-8-7)

# எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பு வர்த்தகர்களே!

## வணிகர் கழகக் கட்டடத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 15

''எமது பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக விளங்குபவர்கள் வர்த்தகர்கள் தான். யாழ். நகரை நவீனமயப்படுத்தலுக்கு வர்த்தகர்கள் தயாராக வேண்டும்.''

இவ்வாறு யாழ். மாநகர சபையின் ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் யாழ். வணிகர் கழகக் கட்டடத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

யாழ். வணிகர் கழகத்துக்கென சொந்தமாக வாங்கப்பட்ட யாழ்ப்பாணம் சிவன் கோயில் மேற்கு வீதியில் (மானிப்பாய் வீதி) உள்ள கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டதை அடுத்து அதன் கீழ்த் தளத்தையும் மேல்தளத்தையும் யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம், யாழ். மாநகர ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டு திறந்துவைத்தனர்.

வணிகர் கழகத் தலைவர் எஸ். சற்குணராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

யாழ். நகரத்தில் கடந்த காலங்களிலும் இன்னமும் மக்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதுகாத்து வருகின்ற பணி வர்த்தகர்களுடையது. பலவித இடைஞ்சலுக்கு மத்தியிலும் வர்த்தகர்களின் சேவை பெரியது. நகரை நவீன மயப்படுத்துகின்ற ஒரு வளர்ச்சிப் பணியாக இன்றைய நிகழ்வைக் கருதலாம். நவீன மயப்படுத்தலுக்கான சிந்தனை இன்னமும் வளரவேண்டும்.

கொழும்பில் தனியார் துறை வளர்ச்சியடைந்துள்ளது. அங்கு ஒவ்வொரு வர்த்தக நிலையங்களும் ஒவ்வொரு திணைக்களம்போல சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றன. ஆனால் எமது வர்த்தகர்கள் கொழும்பைப் போல வசதியாகப் பணிகளைச் செய்ய முடியாத நிர்ப்பந்தம் உள்ளது.

### நகரில் நெருக்கடி

யாழ். நகரில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் போக்குவரத்து, சைக்கிள், மோட்டார் சைக்கிள், இதர வாகனங்களின் போக்குவரத்தினால் யாழ். நகரில் நெருக்கடி அதிகமாகியுள்ளது. இந் நெருக்கடியைக் குறைப்பதில் வர்த்தகர்களும் உதவலாம். அளவுக்கு அதிகமான பொருள்களை வர்த்தக நிலையங்களில் களஞ்சியப்படுத்தாது நகரை ஒட்டிய பகுதிகளில் களஞ்சியங்களை ஏற்படுத்த வேண்டும். இயன்றவரை நகர மத்தியில் களஞ்சியப்படுத்துவதைக் குறைக்க வேண்டும்—என்றார்.

யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் பேசுகையில்—

அரசு, வர்த்தகர்கள், கூட்டுறவு, உற்பத்தியாளர்கள், பொது அமைப்புக்கள் ஆகிய ஐந்து பிரிவான அமைப்புக்களும் மக்களுக்குச் சேவைகளைச் செய்து வருகின்றன.

மக்களுக்குச் சேவைகளைச் செய்யும்போது இலாபத்தை எதிர்பார்க்கிறார்கள். இது தவிர்க்க முடியாதது. அனர்த்தங்களின் போது இந்த அமைப்புக்கள் சில வேளைகளில்பயந்து ஓடிவிடுகின்றன. இறுதியாக வர்த்தகர்கள் மாத்திரம் தமது பொருள்களை எடுத்துச்சென்று சந்தைப்படுத்துகிறார்கள். வர்த்தகர்களுக்குச் சுயநலம் இருந்தாலும் மக்களுக்குச் சேவை செய்கிறார்கள். சுயநலம், இலாபம் இருந்தபோதிலும்அனர்த்தங்களின்போதும் வர்த்தகர்கள் பணி செய்கிறார்கள். கொழும்பிலிருந்து பொருள்களைத் தருவிப்பதற்கு வர்த்தகர்கள் ஒன்றிணைந்து கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்திப் பொருள்களை எடுத்து வந்தால் அதிக இலாபம் கிடைக்கும்—என்றார்.

### கூட்டுறவுச் சமாசத் தலைவர்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் பேசுகையில் கூறியதாவது:

அரசினால் விதிக்கப்பட்டுள்ள பண்டங்கள் சேவைகள் (ஜி.எஸ்.ரி.) வரியை யாழ். மாவட்டத்தில் நீக்குவதற்கு கூட்டுறவுச் சங்க சமாசத்துடன் யாழ் வர்த்தகர்களும் இணைந்து போராட வேண்டும் — என்றார்.

யாழ். வணிகர் கழகத் தலைவர் எஸ். சற்குணராசா தனது தலைமை உரையில்:

'வர்த்தகர்களுக்கு ஒற்றுமை அவசியம். பல வர்த்தகர்கள் இன்னமும் எம்முடன் இணையாது பிரிந்து நிற்கிறார்கள். மூன்று தலைமுறையாக வர்த்தகம் செய்வோரும் இவ்வாறு பிரிந்து நிற்கிறார்கள். நாம் ஒன்றாக இணைந்து வர்த்தகத்துடன் நின்றுவிடாது மக்கள் பணிக்கும் உதவுவோம்' என்றார்.

விழா ஆரம்பத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ விரிவுரையாளர் அருட்திரு. டேமியன் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

யாழ். குடாநாட்டிலுள்ள குருநகர், நெல்லியடி, ஊர்காவற்றுறை வணிகர் கழகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

யாழ், வணிகர்கழக நிர்வாகசபை உறுப்பினர் ஐயா. சச்சிதானந்தம் நன்றி தெரிவித்துப் பேசினார். (ஐ-173)

# வாசகர் திருமுகம்

## துன்பத்திற்குப் பொறுப்பு யார்?

கடந்த 31 - 08 - 2000 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்தவர்கள் காலை 8-00 மணியளவில் துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டார்கள். அவ் விடத்தில் சில உத்தியோகத்தர்கள் (கிராம உத்தியோகத்தர்கள்) வருகை தந்தோரைப் படிவம் ஒன்றினை வழங்கி பதிவு செய்து கொண்டிருந்தார்கள். நண்பகல் 12-00 மணிவரை இப்பிரயாணிகள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படாதது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். சுமார் இருபது மணிநேரம் இக்கப்பலில் பயணம் செய்தவர்களில் வயது முதிர்ந்தவர்கள், நோயாளர்கள், பிறநாட்டவர்கள், மதகுருமார்கள் மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள சில உயரதிகாரிகள் எனப்பலரும் இருந்தார்கள். இவர்களில் 90சதவீதமான பிரயாணிகள் கப்பல் பயணம் ஒவ்வாத காரணத்தால் வாந்தி எடுத்துச் சோர்ந்த நிலையில் காணப்பட்டார்கள். இவர்களில் சில உயரதிகாரிகள் தங்கள் அலுவலக வாகனத்தை வரவழைத்தும், பிரத்தியேக வாகனங்களை ஏற்பாடு செய்து கொண்டும் சென்றதனைக்காண முடிந்தது. இதில் யாழ். மாவட்டபோக்குவரத்துக்குப்பொறுப்பான உயரதிகாரியும்அடங்குவார். இப்போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பாக அங்கு கடமையில் இருந்த கிராம உத்தியோகத்தரை அணுகியபோது இது எமது கடமையல்ல; இதற்குப் பொறுப்பானவர்கள் இராணுவ சிவில் நிர்வாகப் பகுதியே எனக் கூறினார். ஆனால் இராணுவ உத்தியோகத்தர்களை அணுகிய போது இது அரச அதிபரின் கடமை எனக் கைவிரித்ததோடு அவரின் பிரதிநிதிகள் கூட இங்கு வருகை தரவில்லையே எனவும் கூறினார்கள். சுமார் 200 மீற்றர் தூரத்தில் உள்ள பருத்தித்துறை பஸ் நிலையத்தை அடைந்தால் நாம் எங்கள் இருப்பிடத்திற்குச் செல்ல முடியும். ஆனால் நாங்கள் கால் நடையாக வெளியேறக்கூட அனுமதியில்லை. துறைமுகப் பகுதியில் தேநீர், சிற்றுண்டிகள் பெறவோ, மலசலகூட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லை. கொளுத்தும் வெயிலில் ஏன் இப்படி பொது மக்களை வதைக்கிறார்கள்? கப்பலில் பயணம் செய்தால் இது ஒரு தண்டனையா? இப்பிரயாணிகளின் போக்குவரத்து ஏற்பாடுகளுக்குப் பொறுப்பானவர் யார் என்பதை பொது மக்களுக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் தெளிவுபடுத்த வேண்டும். இனிமேலாவது இச்சேவையில் உள்ள குறைபாடுகளை நீக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட பிரயாணிகள் சார்பில்
கே. ரி. தாஸ்

புத்தூர்.

## பாணின் விலை அதிகரிப்பு ஏன்?

பாணுக்கு விதிக்கப்பட்ட உச்ச விலை சாதாரண மக்களைப் பாதிக்கவுள்ளது. தற்போது 350 கிராம் நிறையுடைய பாண் 7,50 சதம் தொடக்கம் 8 ரூபா வரை குடாநாட்டில் விற்பனையாகி வருகிறது. அண்மையில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் தலைமையில் எடுக்கப்பட்ட பாணின் விலை நிர்ணயம் சாதாரண மக்களையே வெகுவாகப் பாதிக்கும். ஏனெனில் 350 கிராம் பாண் 8 ரூபாவாக விற்கும் போது 450 கிராம் பாண் 10 ரூபாவாக விற்கவுள்ளமையை நோக்கும் போது தற்போதுள்ள விலையைவிட அது அதிகரிப்பாகவுள்ளது.

350 கிராம் பாண் உற்பத்தி செய்வதற்கு சுமார் 200 கிராம் கோதுமை மாவே தேவையாகவுள்ளது. தற்போது 450 கிராம் பாண் உற்பத்தி செய்ய சுமார் 250 கிராம் கோதுமை மா போதுமானது. இன்றைய விலையை இதனுடன் ஒப்பு நோக்குதல் வேண்டும்.

தற்போதுள்ள வெதுப்பகங்களில் 350 கிராம் தயாரிக்கக் கூடிய அச்சுக்களே உள்ளன. கூடியளவு மாவை அச்சில் போடும் போது அவை பொங்கமாட்டாது. அதிகமாகப் பாணின் உள்ளே (பச்சை) வேகாத நிலைமையே ஏற்படும்.

போர்க்கால ஆரம்பத்தில் அப்போது நிர்வாகத்தைக் கண்காணித்த போராளிகளின் கடும் கண்காணிப்பிலேயே 350 கிராம் பாண் உற்பத்தி செய்யப்பட்டது. இன்று அரச திணைக்களத்தில் எத்தனை பேர் வெதுப்பகங்களைக் கண் காணிக்கவுள்ளனர்? பாண் உற்பத்தி நடைபெறும் நேரம் அநேகமாக ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. உற்பத்தி செய்யப்படும் பாண் அதிகாலையிலேயே சிற்றுண்டிச் சாலைகளுக்கும் கடைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுவிடுகின்றன. சில விற்பனையாளர்கள் இரண்டு மூன்று வெதுப்பகங்களில் இருந்து பாணைக் கொள்வனவு செய்வார்கள். அரச விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் விற்பனையாளர்களிடம் எவ்வாறு எந்த வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என அறிய முடியும்? ஆகவே பாணின் உச்சவிலை, நிறை என்பவற்றை மீள்பரிசீலனை செய்யுமாறு உரிய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றுள்ள போர்ச் சூழலில் பாணின் விலையில் கைவைக்கும் அவசரம் காட்டப்பட்டமை முதலாளி வர்க்கத்தினருக்குத் துணைபோவதாகவே மக்கள் கருதுகிறார்கள். இடம்பெயர்ந்தோர் அன்றாடம் ஒரு வேளை அல்லது இருவேளை உண்ணும் பாணுக்கு விலை ஏற்றுவது அவர்களை மேலும் பட்டினி நிலைக்கு உள்ளாக்குவதாகும்.

பா. இரகுநாதன்,
புலோலி.

# அறிவித்தல்

## வடபிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச்சங்கம்

### லங்கா சோல்ட் லிமிட்டெட்

மேற்படி சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற உள்ளது. இக்கலந்துரையாடலில் வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்க உள்ளனர். ஆகவே எமது சங்கத்தின் நிரந்தர, அமைய, பருவகால ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

காலம்: 17-09-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

இடம்: யா/ திரு இருதயக் கல்லூரி,
நெல்லியடி, கரவெட்டி.
(நெல்லியடி, கொடிகாமம் வீதியில்)

தலைவர் செயலாளர்

(78382)

# பயிற்சி வகுப்பு

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 9, தரம் 10 வகுப்புகளில் சங்கீதம். நடனம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நாளையும் நாளை மறுதினமும் இராமநாதன் கல்லூரி யூனியன்கல்லூரி (குழு 2) ஆகியவற்றில் நடைபெற உள்ளன. (க-152)

# நினைவஞ்சலி

'இலக்கண வித்தகர்' வித்துவான் இ நமசிவாயதேசிகரின் நினைவஞ்சலி வைபவம் நாளை சனிக்கிழமைமுற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை வழக்கம்பரை அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்திரு க. சுந்தரராசக் குருக்கள் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

கூட்டுப் பிரார்த்தனையும், நினைவுரைகளும் அங்கு இடம் பெறும். (ஐ-28)

தற்பொழுது.....

# யாழ்ப்பாண ஸ்ரூடியோ

சண்டிலிப்பாய்ச் சந்தி,
சண்டிலிப்பாயில்

இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(78387)

# தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு!

சேவை இடைநிறுத்தம் தொடர்பாக பதிவு மேற்கொண்டவர்கள் மட்டும் நாளை (16 - 09 - 2000) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு D.M.I. கல்வி நிலையத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(78393)

யா/ உரும்பிராய்

# சைவத்தமிழ் வித்தியாலயம்

## கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

தலைமை: திரு. சு. யோகராசா முதல்வர்

இடம்: வித்தியாலய பொன்னுத்துரை அரங்கு

காலம்: நாளை (2000-09-16) சனிக்கிழமை
பிற்பகல் 1.30 மணி

**முதன்மை விருந்தினர்**

பேராசிரியர் வ. ஆறுமுகம்
(தலைவர், லயன்ஸ் கழகம் உரும்பிராய்)

**விருந்தினர்கள்**

வைத்திய கலாநிதி லயன் வி. தியாகராசா
(பிராந்தியத் தலைவர், லயன்ஸ் கழகம்)
லயன் இ. நடராஜா
(வலயத் தலைவர், லயன்ஸ் கழகம்)
திரு. கு. சிவபாலன்
(பொறியியலாளர், யாழ். கல்வித் திணைக்களம்)
திரு. ச. புஸ்பநாதன்
(G.T.Z நிறுவன, தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
திரு. இ. சிவஞானசுந்தரம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)
திரு. பு. குணசிங்கம்
(தலைவர், வலி.கிழக்கு பிரதேச சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அ.ச.,ப.மா. சங்கம்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்.,
உரும்பிராய் (78371)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 07 - 1975

மறைவு 15 - 09 - 1997

## அமரர் அந்தோனிப்பிள்ளை ஜெசிற்ரா

ஆண்டு மூன்று ஆனதம்மா
மறக்கவில்லை உந்தன் முகம்;
வருடம் மூன்று சென்றுவிட்டதம்மா
தீரவில்லை எம்துயரம்.
கன்றை இழந்த தாய்ப் பசுவாக தாயவள் தவிக்க
கொம்பில்லா கொடியாக சகோதரர் தவிக்க,
மலர்ந்த உந்தன் முகத்தைக் காண
மனம் துடிக்கும் பெறாமக்களும் மருமகனும்
கூட வருந்தி அழுகின்றார்கள்.
நெஞ்சை விட்டு நீங்கவில்லை
நிதமும் உந்தன் நினைவலைகள்.

— குடும்பத்தினர்

3 ஆம் குறுக்குத்தெரு,
புதுத்தோட்டம்,
பருத்தித்துறை. (78338)

# வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை. கரவெட்டி

## வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தவிசாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்களை 22 - 09 - 2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் கோருகின்றேன். கீழே குறித்த தொகையைச் செலுத்திக் கேள்விப் பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்குமேற்குப் பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்குப் பதிவுத் தபால்மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 25-09-2000 முற்பகல் 11. 00 மணிக்கிடையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. கேள்விகள் 25 - 09 - 2000 முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகள் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | உடுநகர் ச. ச. நிலையக் கட்டடம் அமைத்தல் | 1000/- | 250/- |
| 02. | கொற்றாவத்தை மத்திய ச. ச. நிலையக் கட்டடம் புனரமைப்பு | 1000/- | 250/- |
| 03. | ஜனசக்தி ச. ச. நிலையக் கட்டடம் புனரமைப்பு | 1000/- | 250/- |
| 04. | கொற்றாவத்தை கலைவாணி ச. ச. நிலையக் கட்டடம் புனரமைப்பு | 1000/- | 250/- |
| 05 | ஜோதி ச. ச. நிலையக் கட்டடம் புனரமைப்பு | 1000/- | 250/- |
| 06. | இராசகிராமம் ச. ச. நிலையக் கட்டடம் புனரமைப்பு | 1000/- | 250/- |
| 07. | மண்டான் மாவலி ச. ச. நிலையப் பாலர் பாடசாலைக் கட்டடம் அமைத்தல் | 1000/- | 250/- |
| 08. | உடுநகர் ச. ச. நிலையத்தில் குழாய்க் கிணறு அமைத்தல் | 200/- | 100/- |
| 09. | கிழவிதோட்டம் ச. ச. நிலையத்தில் குழாய்க் கிணறு அமைத்தல் | 150/- | 50/- |
| 10. | வெல்லன் பொதுக்கிணறு புனரமைத்தல் | 150/- | 50/- |
| 11. | முதலைக்குழி மணலாவெளி வீதி | 250/- | 150/- |
| 12. | யார்க்கரு 2 ஆம் ஒழுங்கை | 200/- | 100/- |
| 13. | துன்னாலை தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலை வீதி | 200/- | 100/- |
| 14. | வல்வெட்டி இந்து பாடசாலை வீதி | 1000/- | 250/- |
| 15. | தெடுத்தனை வீதி | 1000/- | 250/- |
| 16. | வீரகத்தி விநாயகர் வீதிகான் அமைத்தல் | 200/- | 100/- |
| 17. | சண்டில்குளம் இறைத்து துப்புரவு செய்தல் | 50/- | 150/- |
| 18. | உச்சில்குளம் படிகட்டுதல் | 150/- | 250/- |

வ. நடராசா, ஜே. பி.
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.

09-09-2000 (சி12932)

# அமைச்சர் ரத்வத்த யாழ்.விஜயம்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கடந்த செவ்வாயன்று யாழ்.நகருக்கு விஜயம் செய்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலில் ஊரெழுவிலுள்ள 51 ஆவது படையணித் தலைமையகத்துக்குச் சென்ற அவர் அங்கு படையினர் மத்தியில் உரையாற்றினார். பின்னர் அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் அவர் யாழ்.நகரப் பகுதிக்கு விஜயம் செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஆரியகுளம் சந்தியில் உள்ள நாகவிகாரைக்குச் சென்று வழிபட்ட அவர் பலாலி திரும்பும் வழியில் திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் பொதுமக்களுடன் உரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜெனரல் ரத்வத்தவுடன் கூட்டுப்படைத் தலைமையக கட்டளைத் தளபதி ஜெனரல் றொஹான் தளுவத்த மற்றும் முப்படைத் தளபதிகள், யாழ். மாவட்டப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா ஆகியோரும் உடன் விஜயம் செய்தனர். (ஐ-4)


வேண்டாம் வேண்டாம்
வேண்டாம் வேண்டாம்
வேண்டாம் வேண்டாம்
வேண்டாம்
வன்முறை
வேண்டாம் வேண்டாம்
வேண்டாம் வேண்டாம்

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்


87 இல் நாடாளுமன்றினுள் கிரனேட் வீசிய

# ஜே.வி.பி. உறுப்பினர் அஜித்குமார கட்சியில் இருந்து விலகினார்!

கொழும்பு,செப்.15

1987 இல் நாடாளுமன்றத்துக்குள் கிரனேட் வீசித் தாக்குதல் நடத்திய சம்பவத்தின் சூத்திரதாரியான ஜே.வி.பி. உறுப்பினர் அஜித்குமார கட்சியில் இருந்து வெளியேறி உள்ளார்.

"ஒரு தொன் எடையுள்ள கொள்கைப் பேச்சுக்களை விட ஓர் அவுன்ஸ் நிறையுள்ள செயல்கள் மேலானவை" என்று அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியில் இருந்து வெளியேறுவது தொடர்பாக அவர் கூட்டிய அந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவரது சகோதரி, தாய் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தில் இவரது மனைவியும் பிள்ளையும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கட்சியின் நிதியை உரியபடி செலவு செய்யாமை உட்பட பல ஒழுங்கீனங்கள் காரணமாகவே கட்சியில் இருந்து விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ-20)

## நாட்டில் இருந்திருந்தால்

# பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் நானும் காணாமற் போயிருப்பேன்

## றொனி டி மெல் தெரிவிப்பு

கொழும்பு,செப்.15

பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் நான் நாட்டில் இருந்திருந்தால் நானும் காணாமல் போனவர்களில் ஒருவனாகியிருப்பேன் என்று கைத்தொழில், பொருளாதார விவகார அமைச்சர் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.ஆட்சிக் காலத்தில் ஐம்பதினாயிரம் இளைஞர்கள் துடிக்கத் துடிக்கக் கொன்று குவிக்கப்பட்டார்கள். எனது மாவட்டத்தில் கூட ஐயாயிரத்து முந்நூறு பேர் கொல்லப்பட்டனர். நான் நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் வாழ்ந்ததால் உயிர் தப்பினேன் என்றும் அவர் கூறினார்.

பொல்கஹவெல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமேல் மாகாணசபை உறுப்பினர் ஏ.எஸ்.இஹலகம தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் டி மெல் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

வடமேல் மாகாணப் பிரதேசத்தில் இரண்டு ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களும் ஒரு விவசாய பொருளாதார மத்திய நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கென ஐநூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)


திருமண வாழ்த்து

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை' - *திருக்குறள்* -

இன்றைய தினம் இல்லற வாழ்வில் இணைந்து கொள்ளும்
எமது நிறுவன இயக்குநரும் மன்றக் காப்பாளருமான

**திருநிறை செல்வன் விக்னேஸ்**
**திருநிறை செல்வி ஜெயசோதி**

ஆகியோர் திருமகள், கலைமகள் அருளால்
சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்தும்
வாழ்த்துப் பா

வாழ்வில் வசந்தம் வந்து மலர்ந்திட
ஏழிசைபோலே இன்பம் மலர்ந்திட
இருமனம் கலந்த திருமண வாழ்வில்
இருவரும் கலந்து இனிமையில் மகிழ்ந்து
இல்லற வாழ்வை நல்லறமாக்கி
நன் மக்களோடு நலமெலாம் பெற்று
பல்லாண்டு காலம் பயன்பட வாழ்க!

*வாழ்த்துவோர்:*
**மாணவர் மன்றம்**
IIS, 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/12937)



✳ போரை நிறுத்துங்கள்!
✳✳ புலிகள் இயக்கத்துடன் பேசுங்கள்!!
✳✳✳ தமிழ் இனத்தை தன்மானத்துடன் வாழவிடுங்கள்!!!
சட்டத்தரணி **ந.சிறீகாந்தா** தலைமையில்
போட்டியிடும் சுயேச்சைக்குழு - இல - 6



X

(78214)



சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவுடன்
தமிழர் தாயகம் தார்மீக ஜனநாயகக் கூட்டாட்சி
சமத்துவம் நிறைந்த சமாதானம் சந்திரிகா தலைமையில் தீர்வு கண்டிட
**வேல்முருகு தங்கராசா**
தலைமையில் போட்டியிடும்
**சுயேச்சைக்குழு இலக்கம் (03)**



ரெலிபோன்
TELEPHONE

X

(78212)

# சங்கிலியன் படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தளராத துணிவும், பிரச்சினைகளிற்கு துணிந்து எதிர்வு கொள்ளும் நெஞ்சுரமுமே இதற்குக் காரணம் என்பது யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தொடரும் மக்களின் இடப்பெயர்வின்போதோ, சொந்த பந்தங்களை இழந்து நிர்க்கதியானபோதோ உண்ண உணவின்றித் தவித்தபோதோ திரும்பிக்கூடப் பார்க்காத சில பிரகிருதிகள் மீண்டும் இன்று உங்களிடம் கையேந்தி வந்து நிற்கின்றன. மழைத்தூறலுக்கு முளைக்கும் காளான்களைப் போல இன்று உங்களிற்கு குடை பிடித்து நிற்கும் இவர்கள் யார்?

தேச விடுதலைக்குப் புறப்பட்டு பின்னர் ஜனநாயக வழிக்கு மீண்டு விட்டதாகக் கூறிக்கொள்ளும் இந்தத் தேசவிரோத ஆயுதக் கும்பல்களை முதலில் முழுமையாக அம்பலப்படுத்துவோம். அவசரகாலச்சட்டத்துக்கு ஆதரவாக கையுயர்த்திக் கோடிக்கணக்கில் பணத்தினைப் பெற்றுக்கொள்ளும் இவர்கள் இன்று அதே அவசரகாலச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்து சாக்கடை அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'பிக்அப்' வாகனங்களிற்காக மொத்தத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த இவர்கள் என்றுமே மன்னிக்கப்பட முடியாதவர்கள்.

இடம்பெயர்ந்து அல்லலுற்ற மக்கள் வீதிகளில் அநாதைகளாக திரிந்தபோது கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த இவர்களா இன்று உங்களுக்காக நியாயம் கேட்கப் போகின்றவர்கள்?

## பொதுத் தேர்தல்

அலைவீசி விடுதலைக் கீதம் இசைத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் இப்புல்லுருவிகள் முதலில் களையெடுக்கப்படவேண்டியவர்கள்.

இந்நிலையில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு முகம்கொடுக்கும் சந்தர்ப்பம் உங்களை எதிர்நோக்கியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சந்திரிகா அம்மையாரின் கைக்கூலிகளாக கள்ள வாக்குப் போட்டு யாழ்ப்பாணத்தில் வெற்றிக்கொடி நாட்டியதாகக் கூறிக் கொண்டவர்கள் உங்களிடம் மீண்டும் வருகிறார்கள்.

முந்திய காலங்கள் போன்று பத்து, இருபது வாக்குகள் மூலம் நாடாளுமன்றம் சென்று ருசி கண்ட இவர்கள் இப்போது கள்ள வாக்குப் போட்டேனும் வெற்றி பெற்றுவிட ஆலாய்ப் பறக்கிறார்கள். இக் கும்பல்களிற்கு சில அரச அலுவலர்களும்,ஊழல் பெருச்சாளிகளும் மற்றும் சில அமைப்புகளும் பக்க பலமாகச் செயற்பட்டு வருகின்றமை எமக்கு கவலையை அளிக்கின்றது.

அர்ப்பணிப்புகள் இடையே வெற்றித் திசையை நோக்கி வீறு நடை போட்டுக்கொண்டிருக்கும் எமது விடுதலைப்போரைத் தளர்வுறச் செய்யும் இப்புல்லுருவிகளின் நடவடிக்கைகளை நாம் மன்னிக்கத் தயாரில்லை. இத்தேசத்துரோகக் கும்பல்கள் மீதும், அதற்குத் துணைபோவோர் மீதும் கடுமையான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் முடிவெடுத்துள்ளோம். இத்தாக்குதலின் போது பொது மக்களாகிய நீங்களும் இடையில் சிக்குண்டு போகக் கூடாது என்பதில் நாம் மிகவும் கவனமாக உள்ளோம்.

எமது அன்பிற்குரிய தமிழீழ மக்களே!

இத்தேசவிரோதக் கும்பல்களை நாம் முற்றாக நிராகரிப்பதுடன் அற்ப சலுகைகளை வழங்கி அவர்கள் வீசும் வலைக்குள் நாங்கள் சிக்கிக் கொள்ளாது தவிர்ப்பதன் மூலம் அநாவசியமான உயிரிழப்புகளையும் தவிர்த்துக் கொள்வோம் எனத் திடசங்கற்பம் எடுத்துக்கொள்வோம் - என்றுள்ளது. (அ)

## ஜேர்மனியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னைக்கு எடுத்துக் கொண்டதாகவும் - அதன் முடிவுகள் இன்னும் ஒரு சில நாள்களில் வெளிவரலாம் என்றும் - உண்ணாவிரதிகளின் நலன்களைக் கவனித்துவருபவரும் சட்ட ஆலோசகருமான எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

(இ-9-8)

# குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், இளைஞர்கள் என்று பலதரப்பினரும் 'ஸ்ரொப் த வார்' (STOP THE WAR) என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் மறியல் போரில் ஈடுபட்டனர்.

குடாநாட்டில் போரை நிறுத்தக் கோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைஅணிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவை இதில் கலந்து கொள்ளவில்லை.

ஆர்ப்பாட்டப் போராட்டம் குறித்து வேட்பாளர் க.தேவதாசனுடன் எமது கொழும்புச் செய்தியாளர் உரையாடினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

தேர்தல் நெருங்கிவரும் இவ்வேளையில் குறுகிய அரசியல் இலாபத்தை கருத்திற் கொண்டு அரசாங்கம் தற்போது வடக்கில் போரை ஆரம்பித்துள்ளது. இதனால் பாதிப்படைவது பொது மக்களே ஆவர். அவர்களின் உடைமைகளும் நாசமாகின்றன. எனவே உடனடியாக அரசு போர்நிறுத்தத்தை மேற்கொண்டு வடக்கில் இயல்பு நிலையை தோற்றுவிக்க வேண்டும்.

போரை நடத்திக்கொண்டு வடக்கில் இயல்பு நிலை இருக்கிறது என்பதை சர்வதேச நாடுகளுக்கு எடுத்துக் காட்டும் நோக்குடனேயே யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதனை உலகின் முன் அம்பலப்படுத்தவே நாம் இந்த மறியல் போராட்டத்தை நடத்துகிறோம் - என்று தெரிவித்தார்.

மறியல் போராட்டம் நடைபெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் அணிகளின் முதன்மை வேட்பாளர்களுக்கு அனுப்பிவைத்த கடிதமொன்றில் வேட்பாளர் க.தேவதாசன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

★ வெறித்தனமாக வீசப்படும் குண்டுகளால் நூற்றுக்கணக்கில் மக்கள் உடல் சிதறி செத்து மடியும் இவ்வேளையில்-

★ தொடரும் பல்குழல் எறிகணை வீச்சினால் குடிமனைகள் அனைத்தும் திட்டமிட்டுத் தரைமட்டமாக்கப்படும் இவ்வேளையில்-

★ ஊரிழந்து, உடைமையிழந்து, நாடோடிகளாய், நடைப்பிணங்களாய் மக்கள் அலைந்துலையும் இவ்வேளையில்-

★ நாளை உயிருடன் இருப்போமோ? என்ற நம்பிக்கையீனத்துடன் கோர யுத்தத்தின் பிடியில் மக்கள் சிக்கித் திணறும் இவ்வேளையில்-

மக்களுக்கு உடனடியாகத் தேவையானது வாக்களிக்கும் உரிமையல்ல, உயிர்வாழும் உரிமையே!

தேர்தல் பற்றிய எமது சிந்தனை மாற்றம் பெற வேண்டும். தேர்தலை நடத்த ஒத்துழைப்பதைவிட போரை நிறுத்த வலியுறுத்துவதே எமது தலையாய கடமையாயிருக்க வேண்டும். மக்களுக்காக இதை நாம் செய்தே ஆகவேண்டும்.

உடனடியாக யுத்தத்தை நிறுத்துமாறும், குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை திரும்ப ஆவன செய்யுமாறும், இவ்வித சூழல் உருவானதன் பின் பொதுத் தேர்தலை யாழ். மாவட்டத்தில் நடத்துவது பற்றி முடிவுசெய்யுமாறும், எம்மக்கள் சார்பாக இத்தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர் அணியினரும் இணைந்து அரசையும் தேர்தல் ஆணையாளரையும் கோர வேண்டும்- என்று கேட்டிருந்தார்.

(அ-186)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கையின் பின்னர் இவர்களது யாழ்ப்பாண விஜயம் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத்துறைப் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதிலும் தமது முன்னணிப்பாதுகாப்பு நிலைகளை விஸ்தரிப்பதிலும் படையினர் வெற்றி கண்டுள்ளனர். இதன்மூலம் அரியாலையூடான புலிகளின் விநியோகப் பாதை துண்டிக்கப்பட்டுவிட்டது.

இந்த மாதம் கொழும்புத்துறைப் பகுதியில் 350புலிகள் வரை கொல்லப்பட்டுள்ளனர். யாழ்.நகர் மீதான பிடியை இதன் மூலம் படையினர் பலப்படுத்தியுள்ளனர். நிலைமை சீரடையும் வரை தற்போதைய தரை நடவடிக்கையும், விமானத் தாக்குதல் நடவடிக்கையும் தொடரும்.

கொழும்புத்துறையில் இடம்பெற்ற சண்டைகளில் சுமார் ஒரு டசின் படை அதிகாரிகள் உட்பட 140 படையினர் உயிரிழந்துள்ளனர்.

அப்பகுதியில் படையினருக்கு உதவியாக பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள், குண்டுவீச்சு விமானங்கள் மூலமும் வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பலகல்ல கூறினார். (இ)


Let me not to the marriage of true minds
Admit impediments, Love is not love
Which alters when it alteration finds,
Or tends with the remover to remove;
O, no! it is an ever - fixed mark.
- Shakespeare, Poems - 116

The community
Of
Institute of Informatics Studies
(IIS)
Offers
Its congratulations to
Vignesh and Jeyasothy
On their
Entering the Blissful State of Matrimony
And
Wishes a long and happy life of service
Dedicated
To student welfare.

100, Clock tower road, Jaffna.
15.09.2000 (C/12936)



(C/1281)


விலையையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!
(ஈ.பி.டி.பி.)
பிணங்கள் சரியும் நம் தெருக்கள்
யுத்த வடுக்களை சுமக்கும்!
வடுக்கள் சுமந்து குனிந்த நம் தேசம்
யுத்தத்தை வெறுக்கும்!
என்றோ ஒரு நாள் நிமிரும்!!
என்றும் அதற்காகவே ஈ.பி.டி.பி!



BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் றோட் - யாழ்நகர்.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By. M. A. HARI
Time: SAT., SUN. 3.00 p.m.
(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)



லாலா சோப் ஸ்தாபனத்தார்
வாழ்த்துகிறார்கள்

அச்சுவேலி - நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்
பிரதம குரு
உயர்திரு.சீ.சிவகுரு அவர்களின்
சைவசமய சேவைகளைப் பாராட்டி எடுக்கப்படும்
பவள விழா
காலம் : இன்று (15.09.2000) வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1.00 மணி
இடம் : ஆலய முன்றல்
தலைவர் : மாண்புமிகு திரு.க.இராசதுரை
(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)
~ லாலா சோப் ஸ்தாபனம்,
அச்சுவேலி.
(C/12941)




த. சுபத்திரன் (றொபேட்)
இல. - 03
யுத்தமற்ற பூமியை உருவாக்குவோம்
இன சமத்துவத்தை நிலைநாட்டுவோம்
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்
சுயேச்சைக் குழு - 02  X

அ.வரதராஜப்பெருமாள்
இல. - 01
(78218)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.